# பாதைக்கு வெளிச்சம்

தமிழ் மாத இதழ்

# PATHAIKKU VELICHHAM

Tamil Monthly Magazine


| | | | |
|---|---|---|---|
| நவம்பர் 2025 | பாதை : 10 | வெளிச்சம் : 7 | வருட சந்தா : ₹100/- |
| November 2025 | Volume : 10 | Issue : 7 | Annual Subscription : ₹100/- |


# கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்.

*பிலிப்பியர் 1:21*






# வெளிச்சத்தைக் கண்டவன் விளம்புகிறதாவது...

## அதிசீக்கிரத்தில் வருகிற ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள்.

நாம் கடைசி நாட்களிலே வாழ்ந்துகொண்டிருக்கிறோம். ஆகவே நாம் எப்பொழுதும் தேவனைக்குறித்தே மேன்மைப் பாராட்டுகிறவர்களாயிருக்க வேண்டும். **“எல்லாருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர்”** (அப். 17:25) என்ற வசனத்தின்படி, இந்த உலகத்தில் உள்ள எல்லாருக்கும் தேவனே, ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிறவராயிருக்கிறார். **“என் சாமர்த்தியமும் என் கைப்பெலனும் இந்த ஐசுவரியத்தை எனக்குச் சம்பாதித்தது என்று நீ உன் இருதயத்தில் சொல்லிக்கொள்ளாமலும் இருக்க எச்சரிக்கையாயிருந்து, உன் தேவனாகிய கர்த்தரை நினைப்பாயாக; அவரே உன் பிதாக்களுக்கு ஆணையிட்டுக் கொடுத்த தம்முடைய உடன்படிக்கையை உறுதிப்படுத்தும்படி, இந்நாளில் உனக்கு உண்டாயிருக்கிறதுபோல, ஐசுவரியத்தைச் சம்பாதிக்கிறதற்கான பெலனை உனக்குக் கொடுக்கிறவர்”** (உபா. 8:17,18) என்ற வசனங்களின்படி, உலகத்தில் உள்ள எந்த மனுஷனும் என் சாமர்த்தியமும் என் கைப்பெலனும் இந்த ஐசுவரியத்தை எனக்குச் சம்பாதித்து என்று தன் இருதயத்தில் சொல்லாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்க வேண்டும். ஏனென்றால் தேவன் ஒருவரே ஐசுவரியத்தை சம்பாதிக்கிறதற்கான பெலனைக் கொடுக்கிறவர். தேவன் பெலன் தராவிட்டால் எந்த மனிதனும் ஐசுவரியத்தை சம்பாதிக்க முடியாது. **“நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது”** (யோவான் 15:5) என்ற வசனத்தின்படி, என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது என்று ஆண்டவராகிய இயேசு சொல்லுகிறார்.

**“பன்னிரண்டு மாதம் சென்றபின்பு, ராஜா பாபிலோன் ராஜ்யத்தின் அரமனைமேல் உலாவிக்கொண்டிருக்கும்போது: இது என் வல்லமையின் பராக்கிரமத்தினால், என் மகிமைப்பிரதாபத்துக்கென்று, ராஜ்யத்துக்கு அரமனையாக நான் கட்டின மகா பாபிலோன் அல்லவா என்று சொன்னான்”** (தானி. 4:29,30) நேபுகாத்நேச்சார் சாத்ராக், மேஷாக் ஆபேத்நேகோ மூலம் தேவன் யார் என்பதை அறிந்துகொண்டவன். ஆனால் அவனோ தேவனைக்குறித்து மேன்மைப்பாராட்டாமல் தன்னைக்குறித்து மேன்மைப்பாராட்டுகிறவனாயிருந்தான். இதினிமித்தம் மனுஷரினின்று தள்ளப்பட்டு, மாடுகளைப்போல புல்லை மேய்கிறவனாயிருந்தான். நடந்தது என்ன? நாட்கள் கடந்தது. தேவன் அவனுக்குக் குறித்திருந்த நாட்கள் வந்தது. **“அந்த நாட்கள் சென்றபின்பு, நேபுகாத்நேச்சாராகிய நான் என் கண்களை வானத்துக்கு ஏறெடுத்தேன்; என் புத்தி எனக்குத் திரும்பிவந்தது; அப்பொழுது நான் உன்னதமானவரை ஸ்தோத்திரித்து, என்றென்றைக்கும் ஜீவித்திருக்கிறவரைப் புகழ்ந்து மகிமைப்படுத்தினேன்; அவருடைய கர்த்தத்துவமே நித்திய கர்த்தத்துவம், அவருடைய ராஜ்யமே தலைமுறை தலைமுறையாக நிற்கும். பூமியின் குடிகள் எல்லாம் ஒன்றுமில்லையென்று எண்ணப்படுகிறார்கள்; அவர் தமது சித்தத்தின்படியே வானத்தின் சேனையையும் பூமியின் குடிகளையும் நடத்துகிறார், அவருடைய கையைத் தடுத்து, அவரை நோக்கி: என்ன செய்கிறீரென்று சொல்லத்தக்கவன் ஒருவனும் இல்லை என்றேன். அவ்வேளையில் என் புத்தி எனக்குத் திரும்பிவந்தது ஆகையால் நேபுகாத்நேச்சாராகிய நான் பரலோகத்தின் ராஜாவைப் புகழ்ந்து, உயர்த்தி, மகிமைப்படுத்துகிறேன்; அவருடைய கிரியைகளெல்லாம் சத்தியமும், அவருடைய வழிகள் நியாயமுமானவைகள்; அகந்தையாய் நடக்கிறவர்களைத் தாழ்த்த அவராலே ஆகும் என்று எழுதினான்”** (தானி. 4:34-37) என்ற வசனங்களின்படி, தன் கண்களை வானத்துக்கு நேராக ஏறெடுத்தான். அவன் புத்தி அவனுக்குள் திரும்பி வந்தபோது மேற்சொன்ன காரியங்களைக் கூறினான். தேவனையல்லாமல் எந்த மனிதனாலும் எதையும் செய்ய முடியாது.

ஆகவே எந்த மனிதனும் தன்னைக்குறித்தோ, தன் பெலத்தைக்குறித்தோ, தன் ஞானத்தைக்குறித்தோ, தன் ஐசுவரியத்தைக்குறித்தோ மேன்மைப் பாராட்டக்கூடாது. இவைகளைத் தந்த தேவனைக்குறித்தே மேன்மைப் பாராட்ட வேண்டும். **“பெலிஸ்தன் சுற்றிப்பார்த்து: தாவீதைக் கண்டு, அவன் இளைஞனும் சவுந்தரிய ரூபமான சிவந்த மேனியுள்ளவனுமாயிருந்தபடியினால், அவனை அசட்டைபண்ணினான். என்னிடத்தில் வா; நான் உன் மாம்சத்தை ஆகாயத்துப் பறவைகளுக்கும் காட்டு மிருகங்களுக்கும் கொடுப்பேன் என்றான்”** (1 சாமு. 17:42,44) என்ற வசனங்களின்படி, ராட்சதனாகிய கோலியாத் தன் பலத்தைக்குறித்து மேன்மைப் பாராட்டுகிறவனாயிருந்தான். **“அதற்குத் தாவீது: பெலிஸ்தனை நோக்கி: நீ பட்டயத்தோடும், ஈட்டியோடும், கேடகத்தோடும் என்னிடத்தில் வருகிறாய்; நானோ நீ நிந்தித்த இஸ்ரவேலுடைய இராணுவங்களின் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் நாமத்திலே உன்னிடத்தில் வருகிறேன். இன்றையதினம் கர்த்தர் உன்னை என் கையில் ஒப்புக்கொடுப்பார். அதனால் இஸ்ரவேலில் தேவன் ஒருவர் உண்டு என்று பூலோகத்தார் எல்லாரும் அறிந்துகொள்ளுவார்கள்”** (1 சாமு. 17:45-47) என்ற வசனங்களின்படி, இளைஞனாகிய தாவீது தேவனைக்குறித்தே மேன்மைப் பாராட்டினதினிமித்தம் கோலியாத்தை வீழ்த்தினான். **“நீ பெற்றுக்கொண்டவனானால் பெற்றுக்கொள்ளாதவன்போல் ஏன் மேன்மைபாராட்டுகிறாய்?”** (1 கொரி. 4:7) என்ற வசனத்தின்படி, நீ உன்னுடைய வாழ்க்கையில் பெற்றுக்கொண்ட சகலமும் தேவனால் உண்டானது. ஆகவே எந்தவிதத்திலும் உன்னைக்குறித்து மேன்மைப் பாராட்டாதே. தேவனைக்குறித்தே மேன்மைப் பாராட்டு. கர்த்தர் வருகிறார். மாரநாதா!!

**கர்த்தரின் வேலைக்காரன்,**

*P அற்புதராஜ் சாமுவேல்*

# கிறிஸ்து எனக்கு ஜீவன் - பாகம் - 1

பிரியமானவர்களே, ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். கடந்த மாதத்திலே இயேசுவுக்காய் பிழைப்பவன் எப்படி இருப்பான்? என்கிற தலைப்பின் கீழ் தியானித்தோம். இந்த மாதம் கிறிஸ்து எனக்கு ஜீவன் என்கிற தலைப்பின் முதல் பகுதியைத் தியானிக்கப் போகிறோம். 2 கொரிந்தியர் 5:14,15 “கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது; ஏனென்றால், எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க, எல்லாரும் மரித்தார்கள் என்றும்; பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லாருக்காகவும் மரித்தாரென்றும் நிதானிக்கிறோம்”. பவுல் சொல்லுகிறதைக் கவனியுங்கள், கிறிஸ்து நம் எல்லாருக்காகவும் மரித்தார், நாம் மரித்திருக்க வேண்டும் ஆனால் அவர் நம் எல்லாருக்காகவும் மரணத்தை ருசிபார்த்தார். ஆகவே பவுல் சொல்லுகிறார், மனிதனுடைய காரியத்திலே நிதானித்துப் பார்க்க வேண்டிய காரியம் ஒன்று உண்டு, இத்தனை அன்புள்ளவராயிருந்து நமக்காக இயேசு மரித்தாரே ஆகவே அந்த அன்பை ருசித்தவனாய் அவருக்கென்று வாழத்தக்கதாய் என் வாழ்க்கை இருக்க வேண்டும் என்றுச் சொல்லி நாம் நம்மை நிதானித்துப் பார்க்க வேண்டும் என்று சொல்லுகிறார். ஆகவே தான் கிறிஸ்துவின் அன்பு என்னை நெருக்குகிறது என்று சொல்கிறார். நான் உதாரணமாய் ஒன்றைச் சொல்லுகிறேன். ஆண்டவருடைய கிருபையினாலே எனக்கு கடன் இல்லை, ஒருவேளை ஒரு மனிதனிடத்தில் நான் பத்தாயிரம் ரூபாய் கடன் பெற்றேனானால் நான் பத்தாயிரம் ரூபாய் திருப்பித் தர வேண்டும், பத்து லட்சம் கடன் பெற்றிருந்தால் பத்து லட்சம் திருப்பித் தர வேண்டும், பத்துக் கோடி கடன் பெற்றிருந்தால் நான் பத்துக் கோடித் திருப்பித் தர வேண்டும், அவர் எனக்கு என்ன தருகிறாரோ அதை நான் அவருக்குத் திருப்பித் தர வேண்டும். ஏனெனில் நான் கடன் பட்டுவிட்டேன். அப்படியே அருமையான சகோதரனே, சகோதரியே நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து உனக்காகவும், எனக்காகவும் தன்னுடைய ஜீவனையேக் கொடுத்தாரே நானும் நீங்களும் என்னக் கொடுக்கப் போகிறோம்? ஏதோ மாதமானால் தசமபாகம் கொடுத்துவிட்டு சபைக்குச் சென்று காணிக்கைப் போடுவது மட்டுமா? அவ்வளவுதான் எங்கள் அன்பு என்பதா? அப்படியா? இது தேவன் மேல் வைத்த அன்பு இல்லையே. உண்மையாய் தேவனுடைய அன்பை ருசித்துப் பார்த்தவன் தன்னுடைய வாழ்க்கையை நிதானித்துப் பார்த்தவன் கிறிஸ்து எனக்கு உயிர், அவர் எனக்காய் உயிரையேக் கொடுத்தாரே அவருக்காக நானும் என்னுடைய உயிரையேக் கொடுப்பேன் என்று சொல்லக்கூடிய அளவிற்கு இயேசுவை உயிராய் நேசிப்பான். பவுல் சொல்லுகிறார் பிலிப்பியர் 1:21 “கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்”. கிறிஸ்துவின் அன்பை ருசித்துப் பார்த்த பவுல், கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம் என்று. கிறிஸ்து எனக்காக உயிரையேக் கொடுத்தாரே நான் மரித்திருக்க வேண்டும், ஆனால் அவர் எனக்காக மரித்தாரே, உயிரைக் கொடுத்தாரே ஆகவே அவர்தான் எனக்கு ஜீவன். அவருக்காக சாவது எனக்கு ஆதாயம் என்று பவுல் சொல்லுகிறார். இத்தனை அன்புள்ளவராக அவர் இருக்கும்போது நீங்களும் நானும் எப்படி இருக்கிறோம்? இன்றைக்கு மனிதனுடைய வாழ்க்கையிலே இயேசு எனக்காக பலியானாரே எனக்காக இரத்தம் சிந்தினாரே, அவருக்காக நான் வாழ வேண்டுமே, உயிராய் எண்ணி வாழ வேண்டும் என்கிற நோக்கமும், ஏக்கமும் இல்லாமல் போயிற்று. அருமையானவர்களே, மனிதன் தன் உயிருக்காக எதையும் இழந்துவிடுவான், நான் சில வருடங்களுக்கு முன்பு ஒரு பத்திரிக்கையை வாசித்தேன், கணவன், மனைவி வீட்டில் படுத்திருக்கிறார்கள், திருடன் வந்துவிட்டான் அவன் அலமாரியைத் திறக்கிறதைப் பார்த்துவிட்டார்கள். ஆனால் கணவன் மனைவியிடம் கண்களைத் திறக்காதே அமைதியாக கண்களை மூடி படுத்துக்கொண்டிரு என்றான், திருடன் திருடிவிட்டு சென்று விட்டான், அடுத்த நாள் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கிறார்கள், காவலர் சொல்லுகிறார் நீங்கள் தான் பார்த்தீர்கள் அல்லவா? சத்தம் போட்டிருக்கலாமே என்றதற்கு, அதற்கு அவர்கள் சத்தம் போட்டால் அவன் எங்கள் உயிரை எடுத்துவிடுவானே, உயிர் போனால் எல்லாம் போனது. என் பொருள் போனாலும் பரவாயில்லை. அப்படியானால், உயிருக்காகப் பொருளை இழக்க மனிதன் தயாராக இருக்கிறான், உயிரை அத்தனையாய் நேசிக்கக்கூடியவன். அதைத்தான் இயேசு உனக்காகவும் எனக்காகவும் கொடுத்தார். அவர் உயிரைக் கொடுப்பாரானால் நீங்களும் நானும் என்ன கொடுக்கப்போகிறோம். அன்பை ருசித்துப் பார்த்த பவுல் சொல்லுகிறார் கிறிஸ்து எனக்கு ஜீவன் அவருக்காக சாவது எனக்கு ஆதாயம் என்று சொல்லுகிறார்.




அப்படியென்றால் ஒரு மனிதன் இயேசுவின் இத்தனைப் பெரிய அன்பை நிதானித்து தன்னுடைய வாழ்க்கையிலே இயேசு தான் எனக்கு உயிர் என்று சொல்லுகிறவன் எப்படி வாழ்வான்? என்கிற காரியத்தைக் குறித்துத் தான் இப்பொழுது நாம் தியானிக்கப் போகிறோம். பழைய ஏற்பாட்டிலே ஒரு சம்பவத்தை நாம் தியானித்து நானும் நீங்களும் என்ன செய்யப் போகிறோம் என்கிற காரியத்தை தேவ சமூகத்தில் தீர்மானிப்போம்.

1 சாமுவேல் 18:1 "அவன் சவுலோடே பேசி முடிந்த பின்பு, யோனத்தானுடைய ஆத்துமா தாவீதின் ஆத்துமாவோடே ஒன்றாய் இசைந்திருந்தது; யோனத்தான் அவனைத் தன் உயிரைப்போலச் சிநேகித்தான்". கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு மகிமை உண்டாகட்டும். இஸ்ரவேல் ஜனங்கள் பெலிஸ்தியனாகிய கோலியாத்திற்கு முன்பு நாற்பது நாட்கள் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள், ஏனென்றால் அவனிடத்தில் போய் யுத்தம் செய்து ஜெயிக்கத்தக்கதான ஆள் இல்லை. அவன் சவால் விடுகிறான், உங்களில் ஒருவன் என்னிடத்தில் வந்து யுத்தம் செய்து ஜெயித்தால் நானும் என் தேசமும் உங்களுக்கு அடிமை, நான் ஜெயித்தால் நீங்களும் உங்கள் தேசமும் எனக்கு அடிமை என்று சொல்லுகிறான். நாற்பது நாட்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் அவர்களால் முடியவில்லை. ஆனால் தாவீது என்கிற ஒரு இளைஞன் வந்தான். அவன் தன் உயிரையேப் பணையம் வைத்து அவனை நான் கொல்லுவேன் என்று சொல்லி சவுலிடத்திலே உத்தரவைப் பெற்றுக்கொண்டு கோலியாத்தை ஒரு கவணில் கல்லைச் சுழற்றி கோலியாத்தை வீழ்த்தி சாகடித்தான். அப்படி அந்த முழு தேசத்தையும் காப்பாற்றினவன் இந்த தாவீது. ஒருவேளை தாவீது வராவிட்டால் முழு தேசமும் இந்த பெலிஸ்தியனாகிய கோலியாத்திற்கு அடிமைப்பட்டிருக்க வேண்டும். ஆனால் தாவீது தன்னுடைய உயிரைப் பணையம் வைத்து எப்படியாவது என்னுடைய தேசத்தைக் காப்பாற்ற வேண்டுமே, என் தேசத்தை அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்க வேண்டுமே என்ற நோக்கத்தோடுகூட தன் ஜீவனையும் பார்க்காதபடிக்கு அவனைக் கொன்றான். இப்பொழுது தேசம் விடுதலையாயிற்று.




இந்த தேசம் விடுதலையான சூழ்நிலையிலே ஒரே ஒரு மனிதன் சவுலின் மகன் யோனத்தான் மாத்திரமே அந்தக் காரியத்தை ருசித்தவனாய் ஐயோ! இந்த தாவீது மாத்திரம் வராவிட்டால், தன் உயிரை பொருட்படுத்தாமல் அவனைச் சாகடிக்காவிட்டால் நாங்களும் எங்கள் தேசம் முழுவதும் அடிமைப்பட்டிருப்போமே, எங்களை உயிரைக் கொடுத்து காப்பாற்றினவன் இந்த தாவீது என்று எண்ணி அவனை என்ன செய்தானாம்? உயிராய் நேசித்தான். யோனத்தானோ பிரபு, சவுல் ராஜாவின் மகன், ஆனால் தாவீதோ ஒரு ஆடு மேய்க்கிற இளைஞன். இவன் தேசத்தைக் காப்பாற்றினதின் நிமித்தமாக அவனை உயிராய் நேசித்தான். அருமையானவர்களே, இயேசு உன்னையும் என்னையும் சாத்தானின் பிடியிலிருந்து விடுதலையாக்கும்படியாக தன்னையே ஒப்புக்கொடுத்து பலியானார், அந்த அன்பை ருசித்துப் பார்த்தார் பவுல். இங்கே யோனத்தான் ருசித்துப் பார்த்தான், உயிராய் நேசித்தானாம். பவுலும் சொல்லுகிறார் கிறிஸ்து எனக்கு ஜீவன். உயிராய் நேசித்த யோனத்தான் தன்னுடைய வழ்க்கையில் எப்படி செயல்படுகிறான் என்று சொல்லி நாம் இப்பொழுது பார்க்கப் போகிறோம். 1 சாமுவேல் 18:3 "யோனத்தான் தாவீதைத் தன் ஆத்துமாவைப் போலச் சிநேகித்ததினால், அவனும் இவனும் உடன்படிக்கைபண்ணிக் கொண்டார்கள்". யோனத்தான் தாவீதை உயிராய் நேசித்தபடியினாலே தாவீதோடுகூட யோனத்தான் உடன்படிக்கைப் பண்ணினான். முதலாவதாக இயேசுவை உயிராய் நேசிக்கிறவன், இயேசு எனக்கு ஜீவன் என்று சொல்லுகிறவன், நிச்சயமாய் அவரோடுகூட உடன்படிக்கை செய்ய வேண்டும். உடன்படிக்கை என்றால் என்ன? 1 பேதுரு 3:20 "அந்த ஆவிகள், பூர்வத்திலே நோவா பேழையை ஆயத்தம்பண்ணும் நாட்களிலே, தேவன் நீடிய பொறுமையோடே காத்திருந்தபோது, கீழ்ப்படியாமற் போனவைகள்; அந்தப் பேழையிலே சிலராகிய எட்டுப்பேர்மாத்திரம் பிரவேசித்து ஜலத்தினாலே காக்கப்பட்டார்கள்". வேதம் சொல்லுகிறது நோவாவின் காலத்திலே தேவன் ஜலப்பிரளயத்தைக் கொண்டு உலகத்தை அழிக்கும்போது ஜனங்களுக்கு அதைக் குறித்த பயமோ, அச்சமோ இல்லை. காரணம் மழை என்பதை அவர்கள் பார்த்ததில்லை. ஆனால் மழை என்று ஒன்று வரப்போகிறது, அழிக்கப்போகிறது என்று தேவன் சொன்ன வார்த்தையை நம்பி விசுவாசித்த நேவா பேழையைச் செய்தான். நோவாவும் அவனுடைய மனைவி, பிள்ளைகள், மருமக்களும் பேழைக்குள் பிரவேசித்தார்கள். வேதம் சொல்லுகிறது ஜலப்பிரளயம் வந்தது முழு உலகத்தையும் அழித்துப்போட்டது, ஆனால் நோவாவின் குடும்பத்தைப் பேழைக் காப்பாற்றவில்லை சத்திய வேதம் சொல்லுகிறது ஜலத்தினால் அவர்கள் காக்கப்பட்டார்கள். எந்த தண்ணீரை நம்பவில்லையோ அந்த தண்ணீர் முழு உலகத்தையும் அழித்துப் போட்டது, ஐயோ! அவன் மழையைப் பார்த்ததில்லை ஆனால் பார்க்காத ஒன்றிற்காக தன்னுடைய காரியங்களை நிதானித்து, இதைச் சொன்னவர் ஆண்டவர். ஆகவே நான் பேழையைச் செய்வேன் என்று சொல்லி பேழையைச் செய்து உள்ளே போனதின் நிமித்தம் முழுக் குடும்பமும் காப்பாற்றப்பட்டது. தண்ணீர் முழு உலகத்தையும் அழித்துப்போட்டது ஆனால் பேழைக்குள் இருந்தவர்களை இந்த ஜலம் காப்பாற்றினது.

அருமையானவர்களே! அடுத்த வசனம் சொல்லுகிறது இதற்கு ஒப்பனையான ஞானஸ்நானம். எதற்கு ஒப்பானதாம்? எந்த தண்ணீரை நம்பவில்லையோ, அதே தண்ணீர் தன்னை நம்பாதவனை அழித்துவிட்டது. எந்த ஞானஸ்நானத்தை நம்பி ஆண்டவரின் சமுகத்திலே உடன்படிக்கை செய்கிறார்களோ, அதே ஞானஸ்நானம் நரகத்திற்கு மனிதனைத் தப்புவிக்கும். வேதம் சொல்லுகிறது ஞானஸ்நானம் தேவனோடுகூட செய்கிற உடன்படிக்கை. அப்படியானால் இயேசுவை உயிராய் நேசிக்கிறவன், ஐயோ! பாவத்திலிருந்து நான் விடுதலையாக வேண்டும், எனக்கு இந்த பாவம் வேண்டாம், ஐயோ! அருவருப்பாய் வாழ்ந்துவிட்டேன், எனக்காய் இயேசு பலியானார் என்கிற எண்ணத்திலே தன் பாவங்களுக்காக மனம் கதறுவான், வேதனைப்பட்டு, அறிக்கையிடுவான். அறிக்கையிட்டபின்பு வேதம் சொல்லுகிறது, பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுவான். ஞானஸ்நானம் பாவம் மன்னிக்கப்பட்டதற்காக பெற்றுக்கொள்ள வேண்டும். அது இயேசுவோடுகூட செய்கிற உடன்படிக்கை. இன்றைக்குச் சிலர் சொல்லுகிறார்கள் கள்ளன் ஞானஸ்நானம் எடுத்தானா? சும்மா இந்த பெந்தெகொஸ்தேக்காரங்க இப்படிதான்! ஐயா! இது பெந்தெகொஸ்தே போதகம் இல்லை, வேதத்தின் போதகம். கள்ளன் ஞானஸ்நானம் எடுக்க வேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால் இயேசு மரித்து உயிரோடு எழும்பி, மேலே செல்லும்போதுதான் இந்த கட்டளையைக் கொடுக்கிறார். உலகமெங்கும் புறப்பட்டுப் போங்கள். சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள். சீஷராக்கி பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே ஞானஸ்நானம் கொடுத்து நான் கட்டளையிட்ட யாவையும் உபதேசம்பண்ணுங்கள் என்று இயேசு பரத்திற்கு போவதற்கு முன்பு சொன்ன கட்டளை. இயேசு மரிப்பதற்கு முன்பு சொன்ன கட்டளையல்ல. ஆனால் எப்படி இந்த ஆபிரகாம், மோசே, தாவீது, ஈசாக்கு, யாக்கோபு எல்லாம் பரலோக ராஜ்ஜியத்திற்கு வருவார்களோ அப்படியே இந்த கள்ளனும் வருவான்.




ஏன்? வலது, இடது பக்கத்தில் உள்ள இரண்டு கள்ளர்களும் பேசிக்கொள்ளுகிறார்கள், ஒரு கள்ளன் சொல்லுகிறான் ஏன் அவரை நிந்திக்கிறாய்? நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம், அப்படியானால் தன் தவறை அவன் ஒத்துக் கொள்ளுகிறான். இரண்டாவது இயேசுவைப் பார்த்துச் சொல்லுகிறான். ஆண்டவரே உம்முடைய ராஜ்ஜியத்தில் வரும்போது அடியேனை நினைத்துக் கொள்ளும். அவன் பாவத்தை உணருகிறான், இவரை ஆண்டவர் என்று ஒத்துக் கொள்ளுகிறான், அதோடுமாத்திரமல்ல இவர் மூலமாய் தான் ராஜ்ஜியத்திற்குப் போக முடியும் என்பதைப் புரிந்துகொண்டான். நீர் என்னைக் கூட்டிக்கொண்டு செல்லும் என்று சொன்னான். அதைத்தான் ஆண்டவர் ஒத்துக்கொண்டார். மனம் வருந்துகிறான், என்னை ஆண்டவர் என்று ஏற்றுக்கொண்டான். வரும் காலத்தில் ராஜ்ஜியம் என்று உண்டு அதில் இயேசு மூலமாய் தான் போகமுடியும் என்று உணர்ந்துகொண்டான், ஆகவேதான் இயேசு சொன்னார், இன்று என்னோடுகூட பரதீஸில் இருப்பாய் என்று. அருமையானவர்களே, இன்றைக்கு வாழ்கிற மக்களுக்கு கள்ளன் ஞானஸ்நானம் எடுக்கவில்லை என்பதனால் அவர்களும் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள விரும்புகிறதில்லை, ஞானஸ்நானம் குழந்தையில் எடுத்து விட்டேன் அதனால் வேண்டாம் என்று சொல்கிறார்கள். அப்படி இல்லை. மனந்திரும்பிய பிறகு ஞானஸ்நானம் எடுத்தால்தான் நீ தேவன் மீது உயிராய் இருக்கிறாய் என்று அர்த்தம். இயேசுவோடுகூட உடன்படிக்கை செய்கிறாய் என்று அர்த்தம். இந்த நேரத்தில் ஆண்டவர் உங்களோடுகூட பேசிக் கொண்டிருக்கிறார். இயேசு எனக்கு உயிர் உயிர் என்று சொல்லி பாடுகிறதும். சொல்லுகிறதுமாய் இருக்கிறாயே, உன் வாழ்க்கையில் மனந்திரும்பினாயா? பாவத்திலிருந்து விடுதலையானாயா? பாவம் மன்னிக்கப்பட்டதற்காக ஞானஸ்நானம் எடுத்து நீ இயேசுவோடு உடன்படிக்கை பண்ணினாயா? யோசித்துப் பார்? சும்மா உயிர் என்று சொல்லி ஏமாற்றாதே, ஆண்டவரை உயிராய் நேசிக்கிறவன், எனக்காய் உயிரைக் கொடுத்தார் என்று சொல்லி அவருடைய அன்பை ருசித்துப் பார்த்து உயிராய் நேசிக்கிறவன் பாவத்திலிருந்து விடுதலையாகி ஞானஸ்நானத்திலே உடன்படிக்கை பண்ணுவான். இது முதலாவது யோனத்தான் செய்த காரியம். இரண்டாவது 1 சாமுவேல் 20:30-32 "அப்பொழுது சவுல் யோனத்தான்மேல் கோபமூண்டவனாகி, அவனைப் பார்த்து: இரண்டகமும் மாறுபாடுமுள்ளவளின் மகனே, நீ உனக்கு வெட்கமாகவும், உன் தாயின் மானத்திற்கு வெட்கமாகவும், ஈசாயின் மகனைத் தோழனாகத் தெரிந்துகொண்டிருக்கிறதை நான் அறியேனோ? ஈசாயின் மகன் பூமியின்மேல் உயிரோடிருக்கும் நாள்வரையும் நீயானாலும் உன் ராஜ்யபாரமானாலும் நிலைப்படுவதில்லை; இப்போதே அவனை அழைப்பித்து, என்னிடத்தில் கொண்டுவா; அவன் சாகவேண்டும் என்றான். யோனத்தான் தன் தகப்பனாகிய சவுலுக்குப் பிரதியுத்தரமாக: அவன் ஏன் கொல்லப்படவேண்டும்? அவன் என்ன செய்தான் என்றான்".

அருமையானவர்களே, ராஜாவின் போஜனத்திற்காக பெரிய அதிகாரிகள் அழைக்கப்பட்டிருந்தார்கள், அமாவாசைக்கும் அமாவாசையின் முந்தின நாளுக்கும் அழைக்கப்பட்டிருந்தார்கள். ஆனால் தாவீது இரண்டு நாளும் அங்கே வரவில்லை. ஆகவே சவுல் யோனத்தானைப் பார்த்துக் கேட்கிறான் தாவீது ஏன் வரவில்லை? என்று. அவன் தன் சகோதரனுடன் சேர்ந்து தேவனுக்குப் பலியிட வேண்டும் என்று பெத்தேல் மட்டும் போக உத்தரவு கேட்டுக்கொண்டான் ஆகவே சென்றுவிட்டான் என்று யோனத்தான் சொல்லும்போது, சவுலுக்குப் பொறுக்க முடியாமல் யோனத்தானைத் திட்டிவிட்டு அவனை இப்பொழுதே கொண்டுவா அவன் சாக வேண்டும். தேசத்தையே உயிரைக் கொடுத்து தியாகம் செய்து மீட்டெடுத்த தாவீதை இந்த தேசத்தின் ராஜா சவுல் சொல்லுகிறார் அவன் சாகவேண்டும் என்று. ஆனால் யோனத்தான் உயிராய் நேசித்தானே தாவீதை அவன் சொல்லுகிறான் தாவீது ஏன் சாக வேண்டும்? அவன் என்ன செய்தான்? ஏன் அவன் சாக வேண்டும்? அருமையானவர்களே, யோனத்தான் தாவீதை உயிராய் நேசித்தபடியினாலே அவன் சாகக்கூடாது என்றான். சாகடிக்க வேண்டும் என்று நினைப்பவனை தடுக்கிறவனாய் இருக்கிறான். அப்படியானால் இயேசுவை உயிராய் நேசிக்கிறவன் நிச்சயமாய் மறுபடியும் இயேசுவைக் கொலைசெய்ய மாட்டான்.



அப்படியானால் இயேசுவை மறுபடியும் கொலை செய்வது என்றால் என்ன? எபிரெயர் 6:5,6 "தேவனுடைய நல்வார்த்தையையும் இனிவரும் உலகத்தின் பெலன்களையும் ருசிபார்த்தும், மறுதலித்துப்போனவர்கள், தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகிறபடியால், மனந்திரும்புகிறதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாதகாரியம்". அருமையானவர்களே! இந்த வசனத்தைக் கவனியுங்கள். மனந்திரும்பின ஒருவன், அவரோடுகூட ஞானஸ்நானத்திலே உடன்படிக்கைப் பண்ணின ஒருவன், பரிசுத்த ஆவியைப் பெற்றவன், வரப்போகிற பலன் உண்டு என்று நினைத்தவன், அனுபவித்தவன், ராஜ்ஜியத்தைக் குறித்து நன்றாய்ப் புரிந்தவன், அவன் மறுபடியும் பாவம் செய்தால் இயேசுகிறிஸ்துவை சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகிறான். கொலைசெய்கிறான். ஆனால் இயேசுவை உயிராய் நேசிக்கிறவன், நிச்சயமாய் இப்படிச் செய்ய மாட்டான். அப்படியானால் மறுபடியும் பாவத்திற்குப் போகிறவன் இரட்சிக்கப்பட்டேன் என்று சொல்லி, ஞானஸ்நானம் பெற்றேன் என்று சொல்லி சபைக்குள்ளே இருக்கிறேன் என்று சொல்லி அதிகாரம் பெற்றிருக்கிறேன் என்று சொல்லி எல்லாவற்றையும் எண்ணுகிற ஒருவன் மறுபடியும் பாவம் செய்யும்போது அவன் இயேசுவைக் கொலை செய்கிறான். இன்றைக்கு எத்தனை விசுவாசிகள், எத்தனை ஊழியக்காரர்கள் ஆண்டவரின் அன்பை ருசித்துப் பார்த்தவர்கள், மீட்கப்பட்டவர்கள், தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றவர்கள், எத்தனைப் பேர் மறுபடியும் பாவத்திற்குச் சென்று விட்டார்கள். இதை வாசித்துக் கொண்டிருக்கிற சகோதரனே, சகோதரியே யோசித்துப் பார்! சூழ்நிலை வரும்போது நீ பாவத்திற்கு போகவில்லையா? இரகசியமாய் பாவம் செய்துகொண்டிருக்கிறாய். நீ இரகசியமாய் பாவம் செய்துகொண்டிருக்கும் போது உன் மனசாட்சி மரித்துவிடும், ஒருநாள் நீ துணிந்து பாவம் செய்வாய். இந்த வேளையிலே தேவன் உன்னை எச்சரித்துக் கொண்டிருக்கிறார், இரட்சிக்கப்பட்ட நீ மனந்திரும்பினவன் தான், இயேசுவோடுகூட உடன்படிக்கை செய்தவன் தான், ஆனாலும் மறுபடியும் பாவம் செய்து சிலுவையில் இயேசுவை அறைந்து சாகடிக்கிறாயே, யோசித்துப் பார்? ஆனால் யோனத்தான் சொல்லுகிறான் அவன் ஏன் சாகவேண்டும்? அப்படியானால் யோனத்தான் தாவீதை உயிராய் நேசிக்கிறதின் நிமித்தமாக அவனைச் சாகடிக்க மனமில்லாதது மாத்திரம் அல்ல, சாகடிக்க வேண்டும் என்று நினைக்கிற சவுலைப் பார்த்து சொல்லுகிறான் ஏன் சாகவேண்டும்? கூடாது. அப்படியே இயேசுவை உயிராய் நேசிக்கிறவன் நிச்சயம் பாவத்திற்கு மரித்து விடுவான். நிச்சயம் பாவம் செய்ய மாட்டான். செத்தாலும் சாவேனே தவிர பாவம் செய்ய மாட்டேன் என்பான். இவன்தான் இயேசுவை உயிராய் நேசிக்கிறவன். தேவைப்படும்போது பாவம் செய்வது அதன் பின் துணிவது, இது இயேசுவைக் கொலை செய்வது. ஆனால் இந்த யோனத்தானோ இல்லை அவன் ஏன் சாக வேண்டும் என்று சொல்கிறான், இந்த வேளையிலே, இயேசுவை உயிராய் நேசிக்கக்கூடிய நீ, வெளியிலே பாடல் அருமையாய் பாடுகிறாய், என் உயிரான, உயிரான, உயிரான என்று சொல்லி இயேசுவை நேசிப்பதுப்போல் காட்சியளிக்கிறாய். ஆனால் உன் வாழ்க்கையின் இரகசியமான காரியத்தை யோசித்துப் பார்! பாவம் செய்யவில்லையா?



இரகசியமாய் செய்யவில்லையா? ஆனால் ஒன்றும் தெரியாததுபோல் நடிக்கிறாய். எவ்விடத்திலிருந்தும் நல்லோரையும் தீயோரையும் நோக்கிப் பார்க்கும் தேவன் உன்னையும் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஐயோ! அவனுக்காக உயிரையேக் கொடுத்தேனே, ஆனால் மறுபடியும் கொலை செய்கிறானே, அருமையான தேவ ஜனமே, இன்றைக்கு அநேக பரிசுத்தவான்களுடைய வாழ்க்கையில், இயேசு மீட்டெடுத்தார் என்று உணர்ந்தவர்கள், மறுபடியும் பாவத்திற்குப் போய்க்கொண்டிருக்கிறார்கள். இரட்சிக்கப்பட்டபோது வைராக்கியமாய் வாழ்ந்தார்கள், உத்தமமாய் தான் வாழ்ந்தார்கள். தேவனுக்காய் அப்படி வாழ வேண்டும், இப்படி வாழ வேண்டும் என்று உற்சாகமாய் இருந்தார்கள், நாட்கள் செல்ல செல்ல, தேவன் மீது இருந்த அன்பும், பக்தியும், பயமும் அற்றுப்போய், தங்கள் மேல் ஆசாபாசம் பெருகிப் போனது. ஆகையினால்தான் அவர்மேல் வைத்த உயிர்போய் தன்னையே நேசித்து, தன் வாழ்க்கையில் தாங்கள் விரும்புகிற பாவத்தை செய்கிறார்கள்.



அருமையானவர்களே, யூதாஸ்காரியோத்தை நன்றாய் அறிவீர்கள், இயேசுகிறிஸ்துவோடுகூட இருந்த 12 அப்போஸ்தலர்களிலே அவனும் ஒருவன், அவனிடத்தில் தான் பணப்பை கொடுக்கப்பட்டிருந்தது, இயேசு அத்தனையாய் அவனை நம்பியிருந்தார், மூன்றரை ஆண்டுகள் அவரோடு இசைந்துப் போனவன் தான். ஆனால் மூன்றரையாவது ஆண்டில்தான் அவரைக் கொல்லுவதற்கு காரணமானவனாய் மாறினான். மூன்றரை வருடம் நன்றாக தான் இருந்தான், அவனிடத்தில் எந்தக் குற்றமும் காண முடியாது. பணப்பையை அவனிடத்தில் கொடுக்கிற அளவிற்கு நம்பிக்கைக்குரியவனாக இருந்தான். ஆனால் மூன்றரையாவது ஆண்டில் தான் அவன் துணிந்து 30 வெள்ளிக்காசுக்காக அவரை முத்தம் செய்து காட்டிக்கொடுத்து இயேசு கொலை செய்யப்படுவதற்குக் காரணமாய் மாறிப் போனான். அருமையான சகோதரனே, சகோதரியே, நீயும் இரட்சிக்கப்பட்ட புதிதில் எத்தனை நேசத்தோடுகூட எத்தனை கரிசனையோடுகூட ஆண்டவருக்காக வாழ்வேன் என்று சொல்லி ஜெபம் செய்து ஜெபத்திலே அதிகமான நேரங்களை செலவிட்டு வாழ்ந்து வந்தாய்? நாட்கள் ஆயிற்று தேவன் உன்னை ஆசீர்வதித்தது உண்மைதான் அந்த ஆசீர்வாதங்களை அனுபவித்த நீ இப்பொழுதோ நிர்விசாரமாய் மாறி ஆண்டவருக்கு விரோதமாய் மாறி பாவம் செய்து துரோகம்பண்ணி இயேசுவை சிலுவையில் அடித்து சாகடித்துக் கொண்டிருக்கிறாய். நீ இயேசுவை உயிராய் நேசிப்பாயானால், இப்படிச் செய்ய மாட்டாய், இந்த சமயத்தில் தேவன் உன்னை நேசிக்கிறார், ஆகவேதான் இந்த நேரத்தில் உன்னோடுகூட பேசும்படிக்கு இந்த வார்த்தையினாலே உன்னை தொட்டுக்கொண்டிருக்கிறார். என்ன சொல்லப்போகிறாய்? ஆண்டவரே என்னுடைய வாழ்க்கையில் இந்த நாள் மனந்திரும்புகிற நாளாய் மாறுவதாக நான் உம்மை உயிராய் நேசித்தது உண்மை. ஒரு காலத்தில் உமக்காய் வெறிப் பிடித்து வாழ்ந்தது உண்மை. உமக்காய் வைராக்கியம் கொண்டு வாழ்ந்தது உண்மை. ஆனால் இன்றோ நான் பாவத்திற்கு அடிமைப்பட்டுவிட்டேன். என்னை மன்னியும் ஆண்டவரே, இன்றைக்கு மறுபடியும் என்னுடைய வாழ்க்கையில் வைராக்கியமுள்ளவனாய் மாறுவதற்கு என்னை ஒப்புக்கொடுக்கிறேன், என்னுடைய வாழ்க்கையை ஆண்டவரே இனிமேல் நீர் விரும்புகிறபடி வாழ ஒப்புக்கொடுக்கிறேன் என்று ஒப்புக்கொடு. இயேசுவை உயிராய் நேசிப்போமா? யோனத்தானைக் குறித்துத் தியானித்தோம், அவன் தன்னையும் தன் தேசத்தையும் உயிரைக் கொடுத்து மீட்டெடுத்த, தன் உயிரையும் தியாகம் செய்து மீட்டெடுத்த அந்த தாவீதை உயிராய் நேசித்தபடியினாலே அவனோடு உடன்படிக்கைப் பண்ணினான், அதோடுமாத்திரமல்ல, அவன் கொலை செய்யப்படக்கூடாது என்று எண்ணம் கொண்டு வாழ்ந்தான். அடுத்து தகப்பன் கொலைச் செய்ய வேண்டும் என்று எண்ணின போதும் கொலை செய்யக் கூடாது என்று சொன்னான். அதேபோல் நீயும் பாவம் செய்யாதே இயேசுவை உயிராய் நேசி, பாவம் செய்துக்கொண்டிருக்கிற விசுவாசியையும் நீ இப்படி செய்யாதே என்று சொல்லி எச்சரி. அப்படி செய்வாயானால் நீ உயிராய் நேசிக்கிறாய் என்று அர்த்தம்.



அந்த நாட்களிலே பவுல் சொன்னதுபோல கிறிஸ்து எனக்கு ஜீவன்; சாவு எனக்கு ஆதாயம் என்று இந்த நாளிலே அர்ப்பணிப்போம். ஆண்டவரே! எனக்காய் உயிரைக் கொடுத்தீரே நீர்தான் எனக்கு உயிர் என்று சொல்வோம். தேவன் நமக்கு விசேஷித்த கிருபைகளைத் தருவாராக. கர்த்தர் வருகிறார். மாரநாதா!

கர்த்தரின் வேலைக்காரன்
P.அற்புதராஜ் சாமுவேல்

பெண்கள் பகுதி

# கவலைப்படாதிருங்கள்



கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரிகளுக்கு கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள்.

அன்பு சகோதரிகளே, ஒருமுறை இயேசுகிறிஸ்து தம்மை அன்பாய் நேசித்த மார்த்தாள் மரியாள் என்ற சகோதரிகளின் வீட்டிற்குப் போயிருந்தார். மூத்த சகோதரியாகிய மார்த்தாள் இயேசுவை உபசரிப்பதற்காக சமையல் வேலையில் ஈடுபட்டிருந்தாள். ஆனால் மரியாளோ, இயேசுவின் பாதத்தில் உட்கார்ந்து அவருடைய உபதேசங்களைக் கேட்க ஆவலோடு இருந்தாள். அப்போது மார்த்தாள் அதிக வேலையினிமித்தம், தன் சகோதரி தனக்கு உதவ வரவில்லையே என வருத்தத்துடன் இயேசுவிடம் வந்து: ஆண்டவரே, நான் தனியே வேலை செய்யும்படி என் சகோதரி என்னை விட்டு வந்ததைக் குறித்து உமக்குக் கவலையில்லையா? எனக்கு உதவி செய்யும்படி அவளுக்குச் சொல்லும் என்றாள். இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: மார்த்தாளே, மார்த்தாளே நீ அநேகக் காரியங்களுக்காக கவலைப்பட்டு கலங்குகிறாய். தேவையானது ஒன்றே. மரியாள் தன்னை விட்டு எடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள் என்றார். (லூக்கா 10:41,42).

அன்பு சகோதரிகளே, அநேக நேரங்களில் நாம் வீணாக அநேக காரியங்களுக்காக கவலைப்பட்டு கலங்குகிறோம். ஆனால் இயேசு சொல்லுகிறார்: மரியாள் தன்னை விட்டு எடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள் என்று. “மனுஷன் அப்பத்தினாலேமாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்” (மத். 4:4) என்று எழுதப்பட்டுள்ளது. “கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது; கர்த்தருடைய சாட்சி சத்தியமும், பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது” (சங். 19:7).



ஆண்டவர் சொல்லுகிறார்: நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது, எல்லாப் புத்திக்கும்மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும் (பிலி. 4:6,7).

கவலைப்படுகிறதினாலே உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்? ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று கவலைப்படாதிருங்கள். இவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் நாடித்தேடுகிறார்கள்; இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார். முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்; அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும் (மத். 6:27, 31-33).

“தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்” (யோவான் 3:16). தேவன் நித்திய ஜீவனாகிய நல்ல பங்கை நமக்குத் தரும்படிக்கு தம்முடைய ஒரேபேறான குமாரனைத் தந்தருளி, உலகத்தின் அசுத்தத்திலிருந்து நம்மை மீட்டெடுத்து தமது சொந்த ஜனமாகத் தெரிந்தெடுத்தார்.

ஒருமுறை நியாயசாஸ்திரி ஒருவன் எழுந்திருந்து அவரை சோதிக்கும்படி போதகரே, நித்திய ஜீவனை சுதந்தரித்துக்கொள்ளும்படிக்கு நான் என்ன செய்ய வேண்டும் என்றான். அதற்கு அவர் நியாயப்பிரமாணத்தில் என்ன எழுதியிருக்கிறது என்றார். அவன் பிரதியுத்தரமாக: உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு பலத்தோடும், உன் முழு சிந்தையோடும் அன்புகூர்ந்து, உன்னிடத்தில் அன்புகூருவதுபோல பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்று எழுதியிருக்கிறது என்றான்.

அப்படியே நாமும் தேவனாகிய கர்த்தரிடத்தில் முழு இருதயத்தோடும்...முழு சிந்தையோடும் அன்புகூருவோமாக. ‘கிறிஸ்து இயேசுவிலுள்ள சிந்தையே உங்களுக்கு இருக்கக் கடவது என்று வேதம் கூறுகிறது. அநேக நேரம் நாம் கவலைப்படும்போது நம் சிந்தையினாலே பாவத்திற்கு இடம் கொடுத்துவிடுகிறோம். எனவே தேவையில்லாத காரியங்களுக்காக வீணாகக் கவலைப்பட்டு கலங்கி, நம் சிந்தையைக் கறைப்படுத்தாதபடிக்கு, கவலைகளை, பாரங்களை கர்த்தர் சமுகத்தில் இறக்கி வைத்துவிட்டு, தாவீதைப்போல எல்லா சூழ்நிலையிலும் கர்த்தரை ஸ்தோத்தரித்து கர்த்தரை மகிமைப்படுத்தும்போது, எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானம், நம் இருதயங்களையும் நம் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக நம்மைக் காத்துக்கொள்ளும்.

அன்பு சகோதரிகளே, தேவையில்லாத கவலைகளை ஒழித்துவிட்டு, மரியாளைப்போல தேவ சமுகத்தில் கிடைக்கும் நல்லப் பங்கை சுதந்தரித்துக்கொள்ளக் கர்த்தர் கிருபை தருவாராக!!

கர்த்தரின் பணியில்
உங்கள் அன்பு சகோதரி,
எப்சிபா அற்புதராஜ்.

# Be Sorrow - துக்கமாயிரு

கர்த்தருடைய பரிசுத்த நாமம் மகிமைப்படுவதாக. எங்களுக்கு மிகவும் அருமையான அன்பு வாலிபரே, ஆண்டவரும் இரட்சகருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் யாவரையும் வாழ்த்துகிறோம். இந்த இதழில் 'துக்கமாயிரு' என்ற தலைப்பில் நாம் தியானிக்க இருக்கிறோம்.

என் அன்பு தம்பி தங்கச்சி, இதுவரைக்கும் தோல்வியையே சந்தித்து வருகிறீர்களா? பாவத்தை மேற்கொள்ள முடியவில்லையா? பரிசுத்தமாய் வாழ முடியவில்லையா? உங்களை யாரும் புரிந்துகொள்ளவில்லையா? சரியான ஆலோசனை கிடைக்கவில்லையா? ஆலோசனைகள் புரியவில்லையா? தேவனிடத்தில் சேர முடியவில்லையா? தேவனுடைய நடத்துதல் என்னவென்று தெரியவில்லையா? உங்கள் மதில் (பாதுகாப்பு), அலங்கம் இடிக்கப்பட்டு இருக்கிறதா? உங்கள் வாழ்க்கை கறைபட்டு இருக்கிறதா? அப்படியென்றால் இதை சரிசெய்ய என்ன செய்யலாம்?

வேதம் சொல்லுகிறது: 2 கொரிந்தியர் 7:9 இப்பொழுது சந்தோஷப்படுகிறேன்; நீங்கள் துக்கப்பட்டதற்காக அல்ல, மனந்திரும்புகிறதற்கேதுவாகத் துக்கப்பட்டதற்காகவே சந்தோஷப்படுகிறேன்.

2 கொரிந்தியர் 7:10 தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது.

நெகேமியா 1:4 இந்த வார்த்தைகளைக் கேட்டபோது நான் உட்கார்ந்து அழுது, சில நாளாய்த் துக்கித்து, உபவாசித்து, மன்றாடி, பரலோகத்தின் தேவனை நோக்கி:

பிரசங்கி 7:3 நகைப்பைப் பார்க்கிலும் துக்கிப்பு நலம்; முகதுக்கத்தினாலே இருதயம் சீர்ப்படும்.

மேலே கொடுக்கப்பட்டுள்ள வசனத்தின்படி, துக்கப்படு, தேவனுக்கு உன் உண்மையான துக்கம் தெரியும் வரை துக்கப்படு. நம்முடைய வாழ்க்கையில் மெய்யான தீர்வை காணவேண்டுமென்றால், தேவன் இடைப்பட்டால் மாத்திரமே முடியும். தேவன் இடைபட வேண்டுமென்றால், ஒரு மனிதனுடைய ஒரு கூட்டத்தினுடைய மெய்யான துக்கம் அவசியமாய் இருக்கிறது. இஸ்ரவேலருடைய துக்கம், ஆகாரின் துக்கம், அன்னாளின் துக்கம், நெகேமியாவின் துக்கம், எஸ்தரின் துக்கம், நினிவேயின் துக்கம் ஆகிய இப்படிப்பட்ட துக்கம் தேவசமுகத்தில் எட்டியபோது தேவன் இரங்கி அவர்களை விடுவித்தார். இன்றைய வாலிபர்கள் தங்கள் ஆவிக்குரிய அவல நிலையை அறிந்திருந்தாலும் அதற்காக துக்கிக்க தவறுகிறார்கள். மாறாக வேறு வழிகளில் இன்பத்தைக் காணச் செல்லுகிறார்கள். இன்னும் சிலரை வேலை, உலகக் கவலை மற்றும் மற்ற காரியங்கள், அவர்களையும் அவர்களின் சிந்தையையும் நேரத்தையும் ஆட்கொண்டபடியால் அவர்களால் ஆவிக்குரிய காரியத்திற்காக கவலைப்பட்டு துக்கிக்க இயலவில்லை.

இதை வாசிக்கிற அன்பு தம்பி தங்கச்சி, உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கை சரியில்லாமல் இருக்குமென்றால், தயவுசெய்து இன்றே துக்கப்படுங்கள். இரண்டு பேர் ஒரு பொருளை வாங்க கடைக்குச் செல்கிறார்கள். இருவருக்கும் கிடைக்கவில்லை. ஒருவர் துக்கப்படவில்லை ஒருவர் துக்கப்பட்டார். அப்படியென்றால் யார் துக்கப்பட்டாரோ, அவரே அந்த பொருளை அதிகமாய் வாஞ்சித்தார் என்று அர்த்தம். உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையின் உண்மையான நிலை உங்களுக்கு மாத்திரமே தெரியும். அதற்காக உண்மையாக அமர்ந்து துக்கப்படுங்கள். நாம் இன்னும் அடையவேண்டிய இலக்கை அடையவில்லையே. ஆகிலும் துக்கப்படாமல் திரிகிறோமே. நம்முடைய துக்கத்தைக்குறித்து நம்முடைய உணவு உடை அலங்காரம் தூக்கம் பேச்சு ஆகியவைகள் சொல்லவேண்டும். அப்படிப்பட்ட துக்கம் என்ன செய்யுமாம், வாசியுங்கள்.

எரேமியா 31:18-20 நீர் என்னைத் தண்டித்தீர், நான் பணியாத மாடுபோல் அடிக்கப்பட்டேன்; என்னைத் திருப்பும், அப்பொழுது திருப்பப்படுவேன்; நீரே என் தேவனாகிய கர்த்தர். நான் திரும்பினபின்பு மனஸ்தாபப்பட்டுக்கொண்டிருக்கிறேன், நான் என்னை அறிந்துகொண்டதற்குப் பின்பு விலாவில் அடித்துக்கொண்டிருக்கிறேன், வெட்கி நாணிக்கொண்டுமிருக்கிறேன், என் இளவயதின் நிந்தையைச் சுமந்து வருகிறேன் என்று எப்பிராயீம் துக்கித்துப் புலம்பிக்கொண்டிருக்கிறதை நிச்சயமாய்க் கேட்டேன்.

எப்பிராயீம் எனக்கு அருமையான குமாரன் அல்லவோ? அவன் எனக்குப் பிரியமான பிள்ளையல்லவோ? அவனுக்கு விரோதமாய்ப்பேசினது முதல் அவனை நினைத்துக்கொண்டே இருக்கிறேன்; ஆகையால் என் உள்ளம் அவனுக்காகக் கொதிக்கிறது; அவனுக்கு உருக்கமாய் இரங்குவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.



மேலே உள்ள வசனங்களை கவனித்துப் பாருங்கள். எப்பிராயீமின் துக்கத்தைக் கேட்ட தேவன் அவனுக்கு இரங்குகிறாரே. அப்படியே அன்பு தம்பி தங்கச்சி நீங்கள் உட்கார்ந்து உங்கள் ஆவிக்குரிய நிலையை உணர்ந்து நேரமெடுத்து (சில நாள், மூன்று நாள் என்று எழுதியிருக்கிறதே) துக்கியுங்கள். உங்கள் துக்கம் சந்தோஷமாய் மாறும். கர்த்தர் அப்படியே செய்வாராக. ஆமென்.

சிறுவர் பகுதி

# நாகமான்



ஹலோ குட்டிப் பிள்ளைகளா, இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள். உங்க எல்லாரையும் மறுபடியும் சந்திப்பதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி. எல்லாரும் எப்படி இருக்கீங்க? Happyஆ இருக்கீங்களா? சுகமாகவும் சந்தோஷமாகவும் இருப்பீங்கனு இயேசப்பாவுக்குள்ள நான் விசுவாசிக்கிறேன்.

இந்த மாதம் ஒரு சுவாரஸ்யமான சம்பவத்தைப் பார்க்கலாமா? வாங்க கதைக்குள்ளே போகலாம்.

சீரிய நாட்டு ராஜாவுக்கு ஒரு படைத்தலைவன் இருந்தான். அவன் பேர் நாகமான். அவன் ஒரு பலம் வாய்ந்த வீரனாயிருந்தான். அவனுடைய எஜமானிடத்தில் அவனுக்கு மிகுந்த மரியாதை இருந்தது. அவன்நிமித்தம் தான் தேவன் சீரியர்களுக்கு விடுதலையைத் தந்தார். ஆனால் அவன் ஒரு குஷ்டரோகி. அவன் வீட்டிலே ஒரு இஸ்ரவேல் தேசத்திலிருந்த ஒரு சிறுபெண்ணை அடிமையாக கொண்டுவந்து வைத்திருந்தார்கள். அவள் நாகமானின் மனைவிக்கு பணிவிடை செய்துகொண்டு வந்தாள்.

அவள் ஒருநாள் தன் எஜமானியிடத்தில் சமாரியாவில் ஒரு தீர்க்கதரிசி இருக்கிறார். அவரிடத்தில் எஜமானை கூட்டிக்கொண்டுப் போனால் அவர் நம்முடைய எஜமானுடைய குஷ்டரோகத்தை நீக்கிவிடுவார் என்று சொன்னாள். அவள் அதை நாகமானிடத்தில் அறிவித்தாள். அவனும் அதைப் பற்றி தன்னுடைய ராஜாவினிடத்தில் தெரிவித்தபோது ராஜா உடனே, நான் இஸ்ரவேலின் ராஜாவுக்கு ஒரு நிருபம் தருகிறேன் அதை எடுத்துக்கொண்டு உடனே போ என்று சொன்னான். உடனே அவனும் அந்த நிருபத்தை எடுத்துக்கொண்டு, பத்து தாலந்து வெள்ளியையும், ஆறாயிரம் சேக்கல் நிறைபொன்னையும், பத்து மாற்று வஸ்திரங்களையும் கொண்டுப் போனான். அந்த நிருபத்தை ராஜாவினிடத்தில் கொடுத்தபோது, அதிலே: இந்த நிருபத்தை உம்மிடத்தில் என் ஊழியக்காரனாகிய நாகமான் கொண்டுவருவான்; நீர் அவன் குஷ்டரோகத்தை நீக்கிவிட அவனை உம்மிடத்தில் அனுப்பியிருக்கிறேன் என்று எழுதியிருந்தது. இஸ்ரவேலின் ராஜா அந்த நிருபத்தை வாசித்தபோது, அவன் தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு: ஒரு மனுஷனை அவன் குஷ்டரோகத்தினின்று நீக்கிவிடவேண்டும் என்று அவன் என்னிடத்தில் நிருபம் அனுப்புகிறதற்கு, கொல்லவும் உயிர்ப்பிக்கவும் நான் தேவனா? இவன் என்னை விரோதிக்கச் சமயம் தேடுகிறான் என்பதைச் சிந்தித்துப்பாருங்கள் என்றான். இஸ்ரவேலின் ராஜா தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்ட செய்தியை தேவனுடைய மனுஷனாகிய எலிசா கேட்டபோது, அவன்: நீர் உம்முடைய வஸ்திரங்களைக் கிழித்துக்கொள்வானேன்? அவன் என்னிடத்தில் வந்து, இஸ்ரவேலிலே தீர்க்கதரிசி உண்டென்பதை அறிந்துகொள்ளட்டும் என்று ராஜாவுக்குச் சொல்லியனுப்பினான். அப்படியே நாகமான் தன் குதிரைகளோடும் தன் இரதத்தோடும் வந்து எலிசாவின் வாசற்படியிலே நின்றான். அப்பொழுது எலிசா: அவனிடத்தில் ஆள் அனுப்பி, நீ போய், யோர்தானில் ஏழுதரம் ஸ்நானம்பண்ணு; அப்பொழுது உன் மாம்சம் மாறி, நீ சுத்தமாவாய் என்று சொல்லச் சொன்னான். அதற்கு நாகமான் கடுங்கோபங்கொண்டு, புறப்பட்டுப் போய்: அவன் வெளியே வந்து நின்று, தன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைத் தொழுது, தன் கையினால் அந்த இடத்தைத் தடவி, இவ்விதமாய்க் குஷ்டரோகத்தை நீக்கிவிடுவான் என்று எனக்குள் நினைத்திருந்தேன். நான் ஸ்நானம்பண்ணிச் சுத்தமாகிறதற்கு இஸ்ரவேலின் தண்ணீர்கள் எல்லாவற்றைப்பார்க்கிலும் தமஸ்குவின் நதிகளாகிய ஆப்னாவும் பர்பாரும் நல்லதல்லவோ என்று சொல்லி, உக்கிரத்தோடே திரும்பிப்போனான். அவன் ஊழியக்காரர் சமீபத்தில் வந்து, அவனை நோக்கி: தகப்பனே, அந்தத் தீர்க்கதரிசி ஒரு பெரிய காரியத்தைச் செய்ய உமக்குச் சொல்லியிருந்தால் அதை நீர் செய்வீர் அல்லவா? ஸ்நானம்பண்ணும், அப்பொழுது சுத்தமாவீர் என்று அவர் உம்மோடே சொல்லும்போது, அதைச் செய்யவேண்டியது எத்தனை அதிகம் என்று சொன்னார்கள். அப்பொழுது அவன் இறங்கி, தேவனுடைய மனுஷனின் வார்த்தையின்படியே யோர்தானில் ஏழுதரம் முழுகினபோது, அவன் மாம்சம் ஒரு சிறுபிள்ளையின் மாம்சத்தைப்போல மாறி, அவன் சுத்தமானான்.

அப்பொழுது அவன் தன் கூட்டத்தோடெல்லாம் தேவனுடைய மனுஷனிடத்துக்குத் திரும்பிவந்து, அவனுக்கு முன்பாக நின்று: இதோ, இஸ்ரவேலிலிருக்கிற தேவனைத்தவிர பூமியெங்கும் வேறே தேவன் இல்லை என்பதை அறிந்தேன் என்று சொன்னான்.



என்ன குட்டிஸ், ஒரு குட்டிப் பெண் சொன்ன ஒரு காரியம் ஒரு மனிதனுடைய வாழ்க்கையையே மாற்றி விட்டது பார்த்தீர்களா? உங்களுக்கும் நிறைய friends இருப்பாங்க தானே? அவங்க வீட்டில் யாராவது வியாதியோடு பிரச்சனையோடு இருப்பாங்க இல்லையா? அல்லது உங்க friendsம் ஏதாவது பிரச்சனையோடு இருப்பாங்க நீங்க அவங்களுக்கு இயேசப்பாவினிடத்தில வந்தா உங்களுக்கு ஒரு solution கிடைக்கும்னு சொல்வீங்களா? அந்த குட்டிப் பெண் சொன்ன ஒரு நற்செய்தி ஒரு மனிதனுடைய வாழ்க்கையையே மாற்றுமென்றால், நீங்க சொல்லப் போற இயேசு என்ற நற்செய்தியும் அநேகருடைய வாழ்க்கையை மாற்றுமல்லவா? என்ன பிள்ளைகளா, சொல்வீங்களா? Try பண்ணித்தான் பாருங்களேன்.

Okay குட்டீஸ், அடுத்த மாதம் சந்திப்போம். அதுவரை தேவ கிருபை உங்களைத் தாங்கட்டும். Bye! God bless you all!

ஜெபம்: அன்புள்ள பிதாவே, நாகமானுடைய வாழ்க்கையை மாற்றின ஒரு சிறுப்பெண்ணை போல நாங்களும் எங்களுக்குத் தெரிந்த எங்கள் friends, relatives க்கு இயேசுவைப் பற்றி சொல்லி அவர்கள் வாழ்க்கையும் மாறுவதற்கு எங்களுக்கு உதவிச் செய்யும். இயேசுவின் மூலம் ஜெபிக்கிறேன் பிதாவே, ஆமென்!

*மனன வசனம்:* "நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்" (1 பேதுரு 2:9).


ஊழியர் பகுதி

# ஊழியனே! நீ கிறிஸ்துவினுடையவனாயிரு!!



இயேசுகிறிஸ்துவின் ஈடு இணையற்ற நாமத்தில் உடன் ஊழியர்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்.

“என்னோடே இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான், என்னோடே சேர்க்காதவன் சிதறடிக்கிறான்” (லூக்கா 11:23) என்ற வசனத்தின்படி, யார் ஒருவன் இயேசுவோடு இல்லையோ அவன் இயேசுவுக்கு விரோதி. அப்படியானால் அவன் சாத்தானோடு இருக்கிறான். பாவம் செய்கிற எவனும் சாத்தானோடு இருக்கிறான். அவன் இயேசுவுக்கு விரோதி. அநேக கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவ மார்க்கத்தில் இருந்தபோதிலும் பாவம் செய்கிறவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் நாங்கள் இயேசுவோடு இருக்கிறவர்கள் என்று சொல்லலாம். ஆனால் அவர்கள் பாவம் செய்கிறதினிமித்தமாக இயேசுவோடு அல்ல சாத்தானோடு இருக்கிறார்கள். உதாரணமாக யூதர்கள் யேகோவாகிய தேவனை வணங்கக்கூடியவர்கள், நியாயப்பிரமாணங்களை கைக்கொள்ளுகிறவர்கள். ஆனால் அவர்களைப்பார்த்து இயேசு என்ன சொல்லுகிறார்? “நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள்; உங்கள் பிதாவினுடைய இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறீர்கள்; அவன் ஆதிமுதற்கொண்டு மனுஷகொலைபாதகனாயிருக்கிறான்; சத்தியம் அவனிடத்திலில்லாதபடியால் அவன் சத்தியத்திலே நிலைநிற்கவில்லை; அவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறபடியால் அவன் பொய்பேசும்போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான்” (யோவான் 8:44) என்ற வசனத்தின்படி, இயேசு யேகோவாவாகிய தேவனைப் பின்பற்றுகிற யூதர்களைப் பார்த்து நீங்கள் பிசாசினால் உண்டானவர்கள் என்றார். காரணம் பிசாசின் குணமுடையவர்களாயிருந்தார்கள். அருமையானவர்களே, “அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார். அவைகளில் நீங்கள் முற்காலத்திலே இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடியாகவும், கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியைசெய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவின் ஆவிக்கேற்றபடியாகவும் நடந்துகொண்டீர்கள். அவர்களுக்குள்ளே நாமெல்லாரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சையின்டியே நடந்து, நமது மாம்சமும் மனசும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தினாலே மற்றவர்களைப்போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம்” (எபே. 2:1-3) என்ற வசனங்களின்படி, நாமும் பிசாசின் குணமுடையவர்களாயிருந்து சாத்தானுடையவர்களாயிருந்தோம். “நான் உன் அருகே கடந்துபோனபோது, உன்னைப் பார்த்தேன்; இதோ, உன் காலம் பருவகாலமாயிருந்தது; அப்பொழுது என் வஸ்திரத்தை உன்மேல் விரித்து, உன் நிர்வாணத்தை மூடி, உனக்கு ஆணையிட்டுக்கொடுத்து, உன்னோடு உடன்படிக்கைபண்ணினேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்; இவ்விதமாய் நீ என்னுடையவளானாய்” (எசே. 16:8) என்ற வசனத்தின்படி, நாம் மனந்திரும்பி, பாவங்களை அறிக்கையிட்டு, இரட்சிப்பின் வஸ்திரத்தைப் பெற்றுக்கொண்ட நம்மை, “அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப்பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து, இப்பொழுது நம்மையும் இயேசுகிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது” (1 பேதுரு 3:21) என்ற வசனத்தின்படி, இயேசுவோடு ஞானஸ்நானத்தில் உடன்படிக்கை பண்ண வைத்தார். இவ்விதமாய் நாம் கிறிஸ்துவினுடையவர்களானோம். அருமையான ஊழியக்கார சகோதரனே, நாம் மனந்திரும்பி பாவங்களை அறிக்கையிட்டு ஞானஸ்நானம் பெற்று கிறிஸ்துவினுடையவர்களாய் மாத்திரமல்ல, “என்னைப் பலப்படுத்துகிற நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து என்னை உண்மையுள்ளவனென்றெண்ணி, இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தினபடியால், அவரை ஸ்தோத்திரிக்கிறேன்” (1 தீமோ. 1:12) என்று வேதம் கூறுகிறபடி, நம்மை ஊழியக்காரர்களாகவும் மாற்றினார். “கர்த்தராகிய நான் பரிசுத்தராயிருக்கிறபடியினாலே நீங்களும் எனக்கேற்ற பரிசுத்தவான்களாயிருப்பீர்களாக; நீங்கள் என்னுடையவர்களாயிருக்கும்படிக்கு, உங்களை மற்ற ஜனங்களை விட்டுப் பிரித்தெடுத்தேன்” (லேவி. 20:26) என்ற வசனத்தின்படி, நாம் கிறிஸ்துவினுடையவர்களாயிருக்கும்படி மற்ற ஜனங்களை விட்டு நம்மைப் பிரித்தெடுத்தார். அதோடுமாத்திரமல்ல “அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக; நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது? கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது? அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது? தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது? நான் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி, அவர்களுக்குள்ளே உலாவி அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள் என்று, தேவன் சொன்னபடி, நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே. ஆனபடியால், நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானவைகளைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். அப்போது, நான் உங்களை ஏற்றுக்கொண்டு, உங்களுக்குப் பிதாவாயிருப்பேன், நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்களென்று சர்வவல்லமையுள்ள கர்த்தர்சொல்லுகிறார்” (2 கொரி. 6:14-18) என்ற வசனங்களின்படி, அவிசுவாசிகளின் ஐக்கியத்தை விட்டு பிரித்தெடுக்கப்பட்ட வாழ்க்கை வாழ வேண்டும்.



கிறிஸ்துவினுடையவர்களாகிய நாம் அவருக்கேற்ற பரிசுத்தமுள்ளவர்களாய் வாழ வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். “கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்” (கலா. 5:24) என்ற வசனத்தின்படி, கிறிஸ்துவினுடையவர்களாகிய நாம் மாம்சத்தையும், சரீரத்தில் உண்டான ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைய வேண்டும். அதாவது மாம்சம் விரும்பும் பாவத்தையும், மாம்சம் இச்சிக்கிற ஆசை இச்சைகளையும் (நவநாகரீக உடை, அலங்காரம், ஆபரணங்களை அணிதல் இவைகளெல்லாம் மாம்சத்தில் உண்டான இச்சை) நாம் கிறிஸ்துவினுடையவர்களாய் இருப்பதினால் இவைகளையெல்லாம் சிலுவையில் அறைய வேண்டும். ஆகவே நமது மாம்சமும் மனசும் விரும்புகிறபடி நாம் செய்ய முடியாது.




உதாரணமாக ஒரு கணவன் மனைவி இருக்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். மனைவி கணவனுடையவள். ஆகவே கணவன் விரும்புகிற விருப்பப்படிதான் நடக்க முடியுமே தவிர மனைவியினுடைய விருப்பப்படி செயல்படுத்த முடியாது. அப்படியே நாம் கிறிஸ்துவினுடையவர்களாய் இருக்கிறபடியினால் மாம்சம் விரும்புகிற பாவங்களையும் மாம்சம் விரும்புகிற ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைகிறவர்களாயிருக்க வேண்டும். “உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா?” (1 கொரி. 6:19) என்ற வசனத்தின்படி, நாம் நம்முடையவர்களல்ல என்பதை அறிய வேண்டும். “கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்” (1 கொரி. 6:20) என்ற வசனத்தின்படி, நாம் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டபடியினால் தேவனுக்கு உடையவைகளாகிய நம்முடைய சரீரத்தினாலும் நம்முடைய ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்த வேண்டும். அருமையான ஊழியனே, நீ கிரயத்துக்குக் கொள்ளப்பட்டவன். ஆகவே உன்னுடைய சரீரத்தினாலும் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்த வேண்டும். “கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல” (ரோமர் 8:9) என்ற வசனத்தின்படி, நாம் கிறிஸ்துவினுடையவர்களாய் இருக்கிறபடியினாலே கிறிஸ்துவின் ஆவியுடையவர்களாயிருக்க வேண்டும். இந்த இடத்தில் கிறிஸ்துவின் ஆவி என்பது பரிசுத்த ஆவி அல்ல, அவருடைய சுபாவம். அவருடையவன் கிறிஸ்துவின் சுபாவம் உடையவனாயிருக்க வேண்டும். கிறிஸ்துவின் ஆவி எப்பொழுது ஒருவனுக்கு வர முடியும்? “அப்படியே கர்த்தரோடிசைந்திருக்கிறவனும், அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறான்” (1 கொரி. 6:17) என்ற வசனத்தின்படி, கிறிஸ்துவினுடையவர்களாகிய நாம் அவரோடு இசைந்து அதாவது அவர் சொன்ன வார்த்தைகளின்படி வாழும்போது மாத்திரமே அவரோடு இசைந்துபோய் அவருடனே ஒரே ஆவியாய் இருக்க முடியும். அதோடுமாத்திரமல்ல “இரண்டுபேர் ஒருமனப்பட்டிருந்தாலொழிய ஒருமித்து நடந்துபோவார்களோ?” (ஆமோஸ் 3:3) என்ற வசனத்தின்படி, அவர் சொன்ன வசனத்திற்கு கீழ்ப்படிந்து வாழ வாழ அவரோடு இசைந்து போக முடியும். அவரோடு இசைந்துபோவது அவ்வளவு சுலபம் இல்லை. எப்பொழுது அவரோடு இசைந்துபோக முடியும்? “அவன் சவுலோடே பேசி முடிந்த பின்பு, யோனத்தானுடைய ஆத்துமா தாவீதின் ஆத்துமாவோடே ஒன்றாய் இசைந்திருந்தது; யோனத்தான் அவனைத் தன் உயிரைப்போலச் சிநேகித்தான்” (1 சாமு. 18:1) என்ற வசனத்தின்படி, இயேசுவை உயிராய் நேசிக்கிறவனால் மாத்திரமே அவரோடு இசைந்து போக முடியும். அருமையான ஊழியனே, நீ கிறிஸ்துவினுடையவன். இயேசுவை உயிராய் நேசித்து அவருடைய வசனத்தின்படி வாழ்வாயானால் அவருடைய ஆவி உடையவனாய் இருப்பாய். “அகோலாள் என்னுடையவளாயிருக்கும்போது சோரம்போனாள்” (எசே. 23:5) என்ற வசனத்தின்படி, அகோலாள் (சமாரியா) என்னுடையவளாயிருக்கும்போதே சோரம்போனாள் என்று தேவன் சொல்லுகிறார். சோரம்போவது என்றால் ஒரு மனைவி தன் கணவன் இருக்கும்போதே வேறொருவனோடு செல்லுவது. இன்றைக்கும் ஆவிக்குரிய உலகத்திலே கிறிஸ்துவினுடையவர்கள் என்று சொல்லக்கூடிய அநேக ஊழியர்களும் விசுவாசிகளும் சோரம்போய்விட்டார்கள். கிறிஸ்துவினுடையவர்கள் சாத்தானோடு இசைந்துபோவதே சோரம் போதல். பாவம் செய்து சாத்தானோடு இசைந்து போகிறார்கள்.




உதாரணமாக சிம்சோன் தேவனுக்காக அபிஷேகம் பண்ணப்பட்ட நியாயாதிபதி. ஆனால் அவன் தேவனோடு இருக்கும்போதே மாம்ச இச்சையினாலே பெண்களோடு உறவுகொண்டு சோரம் போய் விட்டான். "சிம்சோன் திம்னாத்துக்குப் போய், திம்னாத்திலே பெலிஸ்தரின் குமாரத்திகளில் ஒரு பெண்ணைக் கண்டு, திரும்ப வந்து, தன் தாயையும் தகப்பனையும் நோக்கி: திம்னாத்திலே பெலிஸ்தரின் குமாரத்திகளில் ஒரு பெண்ணைக் கண்டேன்; அவளை எனக்குக் கொள்ளவேண்டும் என்றான். அப்பொழுது அவன் தாயும் அவன் தகப்பனும் அவனை நோக்கி: நீ போய், விருத்தசேதனமில்லாத பெலிஸ்தரிடத்தில் ஒரு பெண்ணைக் கொள்ளவேண்டியதென்ன? உன் சகோதரரின் குமாரத்திகளிலும், எங்கள் ஜனமனைத்திலும் பெண் இல்லையா என்றார்கள். சிம்சோன் தன் தகப்பனை நோக்கி: அவள் என் கண்ணுக்குப் பிரியமானவள், அவளையே எனக்குக் கொள்ளவேண்டும் என்றான். அவன் பெலிஸ்தரிடத்தில் குற்றம் பிடிக்க முகாந்தரம் உண்டாகும்படி, இது கர்த்தரின்செயல் என்று அவன் தாயும் தகப்பனும் அறியாதிருந்தார்கள்; அக்காலத்திலே பெலிஸ்தர் இஸ்ரவேலை ஆண்டார்கள். அப்படியே சிம்சோனும் அவன் தாயும் தகப்பனும் திம்னாத்துக்குப் போகப் புறப்பட்டார்கள்; அவர்கள் திம்னாத் ஊர் திராட்சத்தோட்டங்கள்மட்டும் வந்தபோது, இதோ, கெர்ச்சிக்கிற பாலசிங்கம் ஒன்று அவனுக்கு எதிராக வந்தது. அப்பொழுது கர்த்தருடைய ஆவி அவன்மேல் பலமாய் இறங்கினதினால், அவன் தன் கையில் ஒன்றும் இல்லாதிருந்தும், அதை ஒரு ஆட்டுக்குட்டியைக் கிழித்துப்போடுகிறதுபோல் கிழித்துப் போட்டான்; ஆனாலும் தான் செய்ததை அவன் தன் தாய் தகப்பனுக்கு அறிவிக்கவில்லை. அவன் போய் அந்தப் பெண்ணோடே பேசினான்; அவள் சிம்சோனின் கண்ணுக்குப் பிரியமாயிருந்தாள்" (நியா. 14:1-7) என்ற வசனங்களின்படி, திம்னாத்தில் பெலிஸ்திய பெண்ணைக் கண்டு அவள்மேல் ஆசைவைத்தான். "பின்பு சிம்சோன் காசாவுக்குப் போய், அங்கே ஒரு வேசியைக் கண்டு, அவளிடத்தில் போனான்" (நியா. 16:1) என்ற வசனத்தின்படி, காசாவிலே ஒரு வேசியைக் கண்டு அவளிடத்தில் போனான். அதோடுமாத்திரமல்ல, "அதற்குப்பின்பு அவன் சோரேக் ஆற்றங்கரையில் இருக்கிற தெலீலாள் என்னும் பேருள்ள ஒரு ஸ்திரீயோடே சிநேகமாயிருந்தான். அவளிடத்திற்குப் பெலிஸ்தரின் அதிபதிகள் போய்: நீ அவனை நயம்பண்ணி, அவனுடைய மகா பலம் எதினாலே உண்டாயிருக்கிறது என்றும், நாங்கள் அவனைக் கட்டிச் சிறுமைப்படுத்துகிறதற்கு எதினாலே அவனை மேற்கொள்ளலாம் என்றும் அறிந்துகொள்; அப்பொழுது நாங்கள் ஒவ்வொருவரும் ஆயிரத்து நூறு வெள்ளிக்காசு உனக்குக் கொடுப்போம் என்றார்கள். அப்படியே தெலீலாள் சிம்சோனைப் பார்த்து: உன் மகா பலம் எதினாலே உண்டாயிருக்கிறது, உன்னைச் சிறுமைப்படுத்த உன்னை எதினாலே கட்டலாம் என்று நீ எனக்குச் சொல்லவேண்டும் என்றாள். அதற்குச் சிம்சோன்: உலராத பச்சையான ஏழு அகணிநார்க் கயிறுகளாலே என்னைக் கட்டினால், நான் பலட்சயமாகி, மற்ற மனுஷனைப்போல் ஆவேன் என்றான். அப்பொழுது பெலிஸ்தரின் அதிபதிகள் உலராத பச்சையான ஏழு அகணி நார்க் கயிறுகளை அவளிடத்திற்குக் கொண்டுவந்தார்கள்; அவைகளால் அவள் அவனைக் கட்டினாள். பதிவிருக்கிறவர்கள் அறைவீட்டிலே காத்திருக்கும்போது, அவள்: சிம்சோனே பெலிஸ்தர் உன்மேல் வந்துவிட்டார்கள் என்றாள்; அப்பொழுது, சணல் நூலானது நெருப்புப்பட்டவுடனே இற்றுப்போகிறதுபோல, அவன் அந்தக் கயிறுகளை அறுத்துப்போட்டான்; அவன் பலம் இன்னதினாலே உண்டாயிருக்கிறது என்று அறியப்படவில்லை. அப்பொழுது தெலீலாள் சிம்சோனைப் பார்த்து: இதோ, என்னைப் பரியாசம் பண்ணி, எனக்குப் பொய்சொன்னாய்; இப்போதும் உன்னை எதினாலே கட்டலாம் என்று எனக்குச் சொல்லவேண்டும் என்றாள். அதற்கு அவன்: இதுவரைக்கும் ஒரு வேலைக்கும் வழங்காதிருக்கிற புதுக்கயிறுகளால் என்னை இறுகக் கட்டினால், நான் பலட்சயமாகி, மற்ற மனுஷனைப்போல் ஆவேன் என்றான். அப்பொழுது தெலீலாள், புதுக்கயிறுகளை வாங்கி, அவைகளால் அவனைக் கட்டி, சிம்சோனே, பெலிஸ்தர் உன்மேல் வந்துவிட்டார்கள் என்றாள்; பதிவிருக்கிறவர்கள் அறைவீட்டில் இருந்தார்கள்; ஆனாலும் அவன் தன் புயங்களில் இருந்த கயிறுகளை ஒரு நூலைப்போல அறுத்துப்போட்டான். பின்பு தெலீலாள் சிம்சோனைப் பார்த்து: இதுவரைக்கும் என்னைப் பரியாசம்பண்ணி, எனக்குப் பொய்சொன்னாய்; உன்னை எதினாலே கட்டலாம் என்று எனக்குச் சொல்லவேண்டும் என்றாள்; அதற்கு அவன் நீ என் தலைமயிரின் ஏழு ஜடைகளை நெசவுநூல் பாவோடே பின்னி விட்டால் ஆகும் என்றான். அப்படியே அவள் செய்து, அவைகளை ஆணியடித்து மாட்டி: சிம்சோனே, பெலிஸ்தர் உன்மேல் வந்துவிட்டார்கள் என்றாள்; அவன் நித்திரைவிட்டெழும்பி, நெசவு ஆணியையும் நூல்பாவையும்கூடப் பிடுங்கிக்கொண்டுபோனான். அப்பொழுது அவள் அவனைப் பார்த்து: உன் இருதயம் என்னோடு இராதிருக்க, உன்னைச் சிநேகிக்கிறேன் என்று நீ எப்படிச் சொல்லுகிறாய்? நீ இந்த மூன்றுவிசையும் என்னைப் பரியாசம் பண்ணினாய் அல்லவா, உன்னுடைய மகாபலம் எதினாலே உண்டாயிருக்கிறது என்று எனக்குச் சொல்லாமற்போனாயே என்று சொல்லி, இப்படி அவனைத் தினம்தினம் தன் வார்த்தைகளினாலே நெருக்கி அலட்டிக் கொண்டிருக்கிறதினால், சாகத்தக்கதாய் அவன் ஆத்துமா விசனப்பட்டு, தன் இருதயத்தையெல்லாம் அவளுக்கு வெளிப்படுத்தி: சவரகன் கத்தி என் தலையின் மேல் படவில்லை; நான் என் தாயின் கர்ப்பத்தில் பிறந்ததுமுதல் தேவனுக்கென்று நசரேயனானவன்; என் தலைசிரைக்கப்பட்டால், என் பலம் என்னை விட்டுப்போம்; அதினாலே நான் பலட்சயமாகி, மற்ற எல்லா மனுஷரைப்போலும் ஆவேன் என்று அவளிடத்தில் சொன்னான். அவன் தன் இருதயத்தையெல்லாம் தனக்கு வெளிப்படுத்தினதைத் தெலீலாள் கண்டபோது, அவள் பெலிஸ்தரின் அதிபதிகளுக்கு ஆள் அனுப்பி: இந்த ஒருவிசை வாருங்கள், அவன் தன் இருதயத்தையெல்லாம் எனக்கு வெளிப்படுத்தினான் என்று சொல்லச்சொன்னாள்; அப்பொழுது பெலிஸ்தரின் அதிபதிகள் வெள்ளிக்காசுகளைத் தங்கள் கையில் எடுத்துக்கொண்டு அவளிடத்துக்கு வந்தார்கள். அவள் அவனைத் தன் மடியிலே நித்திரை செய்யப்பண்ணி, ஒருவனை அழைத்து, அவன் தலைமயிரின் ஏழு ஜடைகளையும் சிரைப்பித்து, அவனைச் சிறுமைப்படுத்தத் தொடங்கினாள்; அவன் பலம் அவனைவிட்டு நீங்கிற்று. அப்பொழுது அவள்: சிம்சோனே பெலிஸ்தர் உன்மேல் வந்துவிட்டார்கள் என்றாள்; அவன் நித்திரைவிட்டு விழித்து, கர்த்தர் தன்னைவிட்டு விலகினதை அறியாமல், எப்போதும்போல உதறிப்போட்டு வெளியே போவேன் என்றான்" (நியா. 16:4-20) என்ற வசனங்களின்படி, தெலீலாள் என்ற ஸ்திரீயோடே ஐக்கியமாயிருந்து, பாவம் செய்ததோடு பொய் சொல்லுகிறவனாகவும் மாறிப் போனான்.

விக்கிரகாராதனை சாத்தானுக்குரியது. இன்றைக்கு கிறிஸ்துவினுடையவர்கள் அநேகர் விக்கிரகாராதனைக்காரர்களாய் மாறி விட்டார்கள். உதாரணமாக சாலொமோன் தேவனால் நேசிக்கப்பட்டவன். சாலோமோனும் தேவனை நேசித்தவன். "சாலொமோன் வயதுசென்றபோது, அவனுடைய மனைவிகள் அவன் இருதயத்தை அந்நியதேவர்களைப் பின்பற்றும்படி சாயப்பண்ணினார்கள்; அதினால் அவனுடைய இருதயம் அவன் தகப்பனாகிய தாவீதின் இருதயத்தைப்போல, தன் தேவனாகியகர்த்தரோடே உத்தமமாயிருக்கவில்லை. சாலொமோன் சீதோனியரின் தேவியாகிய அஸ்தரோத்தையும், அம்மோனியரின் அருவருப்பாகிய மில்கோமையும் பின்பற்றினான். சாலொமோன் தன் தகப்பனாகிய தாவீதைப்போல கர்த்தரைப் பூரணமாய்ப் பின்பற்றாமல்,கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான். அப்பொழுது சாலொமோன் எருசலேமுக்கு எதிரான மலையிலே மோவாபியரின் அருவருப்பாகிய காமோசுக்கும், அம்மோன் புத்திரரின் அருவருப்பாகிய மோளோகுக்கும் மேடையைக் கட்டினான். இப்படியே தங்கள் தேவர்களுக்குத் தூபங்காட்டிப் பலியிடுகிற அந்நியஜாதியாரான தன் ஸ்திரீகள் எல்லாருக்காகவும் செய்தான். ஆகையால் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சாலொமோனுக்கு இரண்டுவிசை தரிசனமாகி, அந்நியதேவர்களைப் பின்பற்றவேண்டாம் என்று கட்டளையிட்டிருந்தும், அவன் கர்த்தரை விட்டுத் தன் இருதயத்தைத் திருப்பி, அவர் கற்பித்ததைக் கைக்கொள்ளாமற்போனதினால் கர்த்தர் அவன்மேல் கோபமானார்" (1 ராஜா. 11:4-10) என்ற வசனங்களின்படி, அவன் தேவனோடு இருக்கும்போதே தன் ஸ்திரீகளின்நிமித்தமாக அந்நிய தேவர்களுக்கு மேடைகளை கட்டி, பலி செலுத்துகிறவனாய் மாறிப்போனான். அவன் தேவனோடு இருக்கும்போதே சோரம் போனான்.



உலகம் சாத்தானுடையது. "விபசாரரே, விபசாரிகளே, உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா? ஆகையால் உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாகிறான்" (யாக். 4:4) என்ற வசனத்தின்படி, தேவ ஜனங்களை விபசாரரே, விபசாரிகளே என்று வேதம் சொல்லுகிறது காரணம் அவர்கள் உலகத்தை சிநேகிக்கிறவர்களாய் மாறிப்போனார்கள். அருமையான ஊழியனே, கிறிஸ்துவினுடையவர்கள் என்று சொல்லக்கூடிய அநேக ஊழியர்களும் விசுவாசிகளும் உலகத்தை சிநேகிக்கிறவர்களாய் மாறிவிட்டார்கள். அவர்கள் உலக பாரம்பரியங்களையும் சடங்காச்சாரங்களையும் கைக்கொண்டு சாத்தானுடைய குணாதிசயமாகிய ஆடம்பரமாய் வாழ்ந்து கிறிஸ்துவினுடையவர்களாயிருக்கும்போதே உலகத்தாராய் மாறி சோரம் போய்விட்டார்கள். உதாரணமாக தேமா இப்பிரபஞ்சத்தின்மேல் ஆசைவைத்து என்னைவிட்டுப் போய் விட்டான் என்று பவுல் வேதனைப்படுகிறார். "அவர்கள் சத்தியத்தை விட்டு விலகி, உயிர்த்தெழுதல் நடந்தாயிற்றென்று சொல்லி, சிலருடைய விசுவாசத்தைக் கவிழ்த்துப்போடுகிறார்கள். ஆகிலும் தேவனுடைய உறுதியான அஸ்திபாரம் நிலைத்திருக்கிறது; கர்த்தர் தம்முடையவர்களை அறிவாரென்பதும், கிறிஸ்துவின் நாமத்தைச் சொல்லுகிற எவனும் அநியாயத்தைவிட்டு விலகக்கடவனென்பதும், அதற்கு முத்திரையாயிருக்கிறது" (2 தீமோ. 2:18,19) என்ற வசனங்களின்படி, விசுவாசத்தை விட்டு விலகின அநேகர் விசுவாசிகளுடைய, ஊழியர்களுடைய விசுவாசத்தைக் கவிழ்த்துப்போடுகிறார்கள். ஆனால் தேவனுடைய உறுதியான அஸ்திபாரம் நிலை நிற்கும். கிறிஸ்துவினுடையவர்களின் விசுவாசத்தை சத்துரு பல வழிகளிலே விலகப்பண்ணுகிறான். உதாரணமாக "அன்றியும் சகோதரரே, நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினைகளையும் இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக்குறித்து எச்சரிக்கையாயிருந்து, அவர்களை விட்டு விலகவேண்டுமென்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன். அப்படிப்பட்டவர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்யாமல் தங்கள் வயிற்றுக்கே ஊழியஞ்செய்து, நயவசனிப்பினாலும் இச்சகப்பேச்சினாலும், கபடில்லாதவர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிறவர்களாயிருக்கிறார்கள்" (ரோமர் 16:17,18) என்ற வசனங்களின்படி, வயிற்றுக்கு ஊழியம் செய்கிறவர்கள் நயவசனிப்பினாலும் இச்சகப்பேச்சினாலும், கபடில்லாத கிறிஸ்துவினுடையவர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிறார்கள்.

"...இரட்சிக்கப்படத்தக்கதாய்ச் சத்தியத்தின்மேலுள்ள அன்பை அவர்கள் அங்கிகரியாமற்போனபடியால் அப்படி நடக்கும். ஆகையால் சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு, அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார்" (2 தெச. 2:10-12) என்ற வசனங்களின்படி, சத்தியத்தின்மேல் அன்பில்லாததினாலே சத்தியத்தின்படி அநேகர் நடப்பதில்லை. காரணம் சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிறார்கள். ஆகவே தேவனே பொய்யை விசுவாசிக்கத்தக்கதாக கொடிய வஞ்சகத்தை அவர்களுக்குள் அனுப்புகிறார்.



அருமையான ஊழியனே, நீ வசனத்துக்கு நடுங்குகிறவனாயிரு. வயிற்றுக்கு ஊழியம் செய்கிறவர்களின் இச்சக வார்த்தையினாலோ, நய வசனிப்பினாலோ நீ ஏமாற்றப்படாதே!! "நீதியைச் சரிக்கட்டும் நாள் என் மனதிலிருந்தது; என்னுடையவர்களை மீட்கும் வருஷம் வந்தது" (ஏசாயா 63:4) என்ற வசனத்தின்படி, இயேசு வருவதற்கு முன்னால் நடக்கும் என்று சொன்ன அத்தனை காரியங்களும் நடந்துகொண்டிருக்கிறது. அப்படி அவர் வரும்போது, "அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான், முதற்பலனானவர் கிறிஸ்து; பின்பு அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள்" (1 கொரி. 15:23) என்ற வசனத்தின்படி, அவர் வருகையில் அவருடையவர்கள் மீட்கப்படுவார்கள். எப்படி மீட்கப்படுவார்கள்? "கர்த்தருடைய வார்த்தையை முன்னிட்டு நாங்கள் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: கர்த்தருடைய வருகைமட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரையடைந்தவர்களுக்கு முந்திக்கொள்வதில்லை. ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு, உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக மேகங்கள்மேல், அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்" (1 தெச. 4:15-17) என்ற வசனங்களின்படி, கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களாகிய அவருடையவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கிற அவருடையவர்களாகிய நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக மேகங்கள்மேல் எடுத்துக்கொள்ளப்பட்டு இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்.



"அப்பொழுது கர்த்தருக்குப் பயந்தவர்கள் ஒருவரோடொருவர் பேசிக்கொள்வார்கள்; கர்த்தர் கவனித்துக்கேட்பார்; கர்த்தருக்குப் பயந்தவர்களுக்காகவும் அவருடைய நாமத்தைத் தியானிக்கிறவர்களுக்காகவும் ஞாபகப்புஸ்தகம் ஒன்று அவருக்கு முன்பாக எழுதப்பட்டிருக்கிறது. என் சம்பத்தை நான் சேர்க்கும் நாளிலே அவர்கள் என்னுடையவர்களாயிருப்பார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; ஒரு மனுஷன் தனக்கு ஊழியஞ்செய்கிற தன்னுடைய குமாரனைக் கடாட்சிக்கிறதுபோல நான் அவர்களைக் கடாட்சிப்பேன்" (மல். 3:16,17) என்ற வசனங்களின்படி, இயேசு வரும்போது அவருடைய சம்பத்தை சேர்க்கும் நாளிலே கர்த்தருக்குப் பயந்து, அவருடைய நாமத்தை தியானித்து செயல்படுகிற கிறிஸ்துவினுடையவர்களை சேர்த்துக்கொள்வார். அருமையான ஊழியனே, கிறிஸ்துவினுடையவனாகிய நீ கிறிஸ்துவினுடையவனாய் இந்த பூமியிலே வாழ். அப்படி வாழக்கூடிய கிறிஸ்துவினுடையவனாகிய நீ உன்னுடைய மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்துவிடு. இயேசுவை உயிராய் நேசித்து கர்த்தரோடிசைந்து வாழ்ந்து அவருடையவனாகிய நீ அவருடைய ஆவியை உடையவனாயிரு. எந்தவொரு நாளிலும் பாவம் செய்து பிசாசோடு சேர்ந்து சோரம்போய் விடாதே, விக்கிரகாராதனை செய்து சாத்தானோடு சேர்ந்து சோரம்போய்விடாதே. உலகத்தாராய் வாழ்ந்து சாத்தானோடு சேர்ந்து சோரம்போய்விடாதே. அதோடுமாத்திரமல்ல கிறிஸ்துவினுடையவர்களை விசுவாசத்தை விட்டு விலகப் பண்ணும்படிக்கு அநேக வஞ்சக ஆவிகள் சுற்றித்திரிகிறது. கிறிஸ்துவினுடையவனாகிய நீ அவைகளில் சிக்கிக்கொள்ளாதபடி உன்னைக் காத்துக்கொள். கிறிஸ்துவினுடைய வருகையிலே கிறிஸ்துவினுடையவனாயிருந்து அவரைச் சந்தித்து அவருடனே என்றைக்கும் இருக்கும்படி உன்னை ஆயத்தப்படுத்து. கர்த்தர் வருகிறார். மாரநாதா!!

கர்த்தரின் வேலைக்காரன்
P. அற்புதராஜ் சாமுவேல்

<u>வாசகர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்:</u> தயவுசெய்து உங்கள் ஆண்டு சந்தா ரூ 100 கொடுத்து புதுப்பித்துக்கொள்ளுங்கள். ஒன்றுக்கும் மேற்பட்ட பத்திரிக்கை கிடைத்தாலோ அல்லது பத்திரிக்கை கிடைக்கவில்லையென்றாலோ தயவுசெய்து 9677050234 என்ற தொலைபேசி எண்ணை அழைக்கவும்.


கர்த்தருடைய வேலைக்காரனாகிய P.அற்புதராஜ் சாமுவேல் பங்கேற்கும் கூட்டங்கள்

| நவம்பர் | இடம் | தொடர்புக்கு |
|---|---|---|
| 6,7 | சிதம்பரம் | 9750263298 |
| 14 - 16 | சிங்காடிவாக்கம் | 9942570878 |
| 17 | அயனாவரம் | 9934144907 |
| 21 - 23 | அருமனை | 9486942933 |
| டிசம்பர் | இடம் | தொடர்புக்கு |
| 15 | அயனாவரம் | 9934144907 |

# பாதை அறியாதோருக்கு பாதை காட்டியவர்கள்




சாமுவேல் மார்ஷ்டன் (1764 — 1838)



ரோமப் பேரரசு உருவெடுத்துக் கொண்டிருந்த காலம். பலர் வெவ்வேறு பகுதிகளில் சுறுசுறுப்பாக வேலை பார்த்துக் கொண்டிருந்தார்கள். வீதியில் போய்க் கொண்டிருந்த அறிஞர் ஒரு தொழிலாளியைப் பார்த்து நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய்? என்று கேட்டார். அதற்கு அவன் கல்லை உடைத்துக் கொண்டிருக்கிறேன் என்றான். சற்று கடந்து சென்று இன்னொருவனைப் பார்த்தும் அதே கேள்வியைக் கேட்டார். அவன் நான் ஒரு கல்தூணை உருவாக்கிக் கொண்டிருக்கிறேன் என்றான். மூன்றாவது தொழிலாளியிடமும் அதே கேள்வியைக் கேட்டார். அதற்கு அவன், நான் பலரோடு சேர்ந்து பெரிய ஆலயத்தைக் கட்டிக்கொண்டிருக்கிறேன் என்றான்.


மூவரின் பதில்களிலிருந்து அவர் ஒன்றைத் தெரிந்து கொண்டார். முதலாமவன் தன் வயிற்றுப் பிழைப்பில் கவனம் செலுத்தினான். இரண்டாமவன் அன்றைய தொழிலின் மீது கவனம் செலுத்தினான், மூன்றாமவனோ பெரிய முழுமையான குறிக்கோளின் மீது கவனம் செலுத்தினான்.

சாமுவேல் மார்ஷ்டன் ஆஸ்திரேலியாவில் தன் போதகப் பணியைச் செய்துக்கொண்டிருந்தாலும், இவருடைய குறிக்கோளோ நியூசிலாந்திலுள்ள மயூரி மக்கள் மத்தியில் சுவிசேஷம் அறிவித்திட வேண்டும் என்பதாகவே இருந்தது.

1814 ஆம் ஆண்டு, அம்மக்களைத் தேடி புறப்பட்டார். இவர்கள் காட்டுமிராண்டிகளாகவும், நாகரிகமற்றவர்களாகவும், மனிதர்களை வேட்டையாடிப் புசிப்பவர்களாகவும், கொடூரமாக சண்டையிடுபவர்களாகவும் காணப்பட்டனர். ஆனால், அப்படிப்பட்ட மக்களை கிறிஸ்துவுக்குரியவர்களாக மாற்ற வேண்டும் என்பதில் இவர் தன் முழு கவனத்தையும் செலுத்தினார்.

ஏழு முறை நியூசிலாந்திற்குப் பயணம் செய்த இவர் மூலம் பள்ளிகளும், செமினரிகளும், ஆலயங்களும் கட்டப்பட்டன. கிறிஸ்துவின் அன்பு அங்கே மலர்ந்தது. மக்களின் வாழ்வு மாற்றம் பெற்றது. சாமுவேல் மார்ஷ்டன் அம்மக்களின் மனதில் நீங்கா இடம் பெற்றார்.

பீட்டர் ஃபேபர் (1506 - 1569)




இக்னேஷியஸ் லயோலா என்பவர் ஆரம்பித்த இயேசு சபையின் முதற் கனியே பீட்டர் ஃபேபர். கி.பி. 1506 ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டில் வில்லாரை என்ற சிற்றூரில் பிறந்தார். சிறு வயதில் தன் தந்தையின் ஆட்டுமந்தையை மேய்த்து வந்தார்.

இவர், இணையற்ற நினைவாற்றலும், அபாரமாகப் புரிந்துகொள்ளும் சக்தியும் பெற்றிருந்தார். ஆயினும், வசதியில்லாத காரணத்தால் பள்ளிக்குச் செல்ல முடியவில்லை. இதனை நினைத்துப் பலமுறை இரவும் பகலும் ஏங்கித் தவித்தார். இதனையறிந்த பெற்றோர் மிகவும் கடினப்பட்டு இவரைப் படிக்க வைத்தனர்.

19 வது வயதில் பாரிஸ் பல்கலைக்கழகத்தை அடைந்தார். பிரான்சிஸ் சேவியரும், இவரும் ஒரே அறையில் தங்கி படித்தனர். அங்கே ஞான வாழ்வில் முன்னேற அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டார்.

1534 ஆம் ஆண்டு குரு பட்டம் பெற்றார். துறவற வாழ்க்கையில் துவண்டுவிடாமல் பணி செய்ய பொருத்தனை செய்து, துருக்கியர்களுக்கு நற்செய்தி அறிவிக்க தன்னை அர்ப்பணித்தார். அவ்வேளையில் துருக்கியருக்கும், கிறிஸ்தவர்களுக்கும் போர்மூளும் அபாயம் ஏற்பட்டதால் இவரால் அங்கு செல்லமுடியவில்லை. ஆயினும், வெனிஸ் நகரம் சென்று அங்குள்ள மருத்துவமனைகளிலுள்ள நோயாளிகளுக்குத் தொண்டுகள் புரிந்தார்.

4 ஆண்டுகளுக்குப் பிறகு பர்மா என்ற இடத்திற்குச் சென்று, அம்மக்களை விசுவாசத்திலும், ஒழுக்கத்திலும் வளரச் செய்து, மாபெரும் மனந்திரும்புதல் ஏற்பட வழி வகுத்தார். இதற்கிடையே கத்தோலிக்கருக்கும், புரோட்டஸ்டாண்டுகளுக்கும் இடையே ஏற்படவிருந்த நல்லிணக்கத்தை நிலைநாட்ட சமாதானத் தூதுவராகச் சென்று, அதனைத் திறம்பட செய்து முடித்தார்.

1544 ஆம் ஆண்டு போர்ச்சுக்கல் நாட்டு அரசன் விருப்பப்படி ஃபேபர் அங்கு சென்றார். அங்கு அரசனுக்கும் அவரது குடிமக்களுக்கும் இயேசுகிறிஸ்து தரும் மாபெரும் விடுதலையை மகிழ்ச்சியுடன் அறிவித்து, மன்னராகிய இயேசுவின் மடியினில் சாய்ந்தார்.

# இயேசு எல்லாராலும் நற்சாட்சி பெற்றவர்



"நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியை பின்வைத்துப் போனார்" (1 பேதுரு 2:21) என்று வேதம் கூறுகிறபடி, நாம் நமக்கு மாதிரியான இயேசுவை முன்வைத்து வாழ்வோம்.

அருமையானவர்களே நாம் இயேசுகிறிஸ்துவால் இரட்சிக்கப்பட்டவர்கள்தான். ஆனால் மனிதன் தன் பெலவீனங்களினாலே தன் நற்சாட்சியை இழந்துப் போகிறான். உதாரணமாக, கோபம், சண்டை, களியாட்டு, பொய், திருட்டு, லாகிரி வஸ்துகளை உபயோகப்படுத்துதல் போன்ற இப்படிப்பட்ட பெலவீனங்களினாலே சாட்சியை இழந்து போகிறான். ஆகவேதான் இதை அறிந்த இயேசு பெலவீனங்களிலே நமக்கு உதவி செய்யும்படியாய் பரிசுத்த ஆவியைத் தந்தார். "பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்" (அப். 1:8) என்ற வசனத்தின்படி, பெலவீனம் நீக்கப்பட்டு பெலமுள்ள சாட்சியாக வாழும்படிக்கே தேவன் பரிசுத்த ஆவியைக் கொடுத்தார். எப்பொழுது ஒருவர் நற்சாட்சி பெற முடியும்?

1. மற்றவர்களுக்கு நன்மை செய்வதின் மூலம்

"இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது" (மத். 5:16) என்ற வசனத்தின்படி, நாம் செய்கிற நற்கிரியைகளினிமித்தமாக தேவன் மகிமைப்படுவார். அதோடுமாத்திரமல்ல நம்மைக்குறித்து ஜனங்களும் சாட்சி சொல்லுவார்கள். இயேசு என்ன செய்தார்? "நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்தஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம்பண்ணினார்; தேவன் அவருடனேகூட இருந்தபடியினாலே அவர் நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார்" (அப். 10:38) என்ற வசனத்தின்படி, இயேசு இந்த பூமியிலே இருந்தபோது நன்மை செய்கிறவராக சுற்றித் திரிந்தார்.

"உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், நன்மைசெய்யுங்கள், கைம்மாறுகருதாமல் கடன் கொடுங்கள், அப்பொழுது உங்கள் பலன் மிகுதியாயிருக்கும், உன்னதமானவருக்கு நீங்கள் பிள்ளைகளாயிருப்பீர்கள், அவர் நன்றியறியாதவர்களுக்கும் துரோகிகளுக்கும் நன்மைசெய்கிறாரே" (லூக்கா 6:35) என்ற வசனத்தின்படி, தேவன் எல்லாருக்கும் விசேஷமாக நன்றியறியாதவர்களுக்கும் துரோகிகளுக்கும் கூட நன்மைசெய்கிறார். அப்படியே இயேசுகிறிஸ்து இந்த உலகத்தில் வாழ்ந்தபோது நன்றியறியாதவர்களுக்கும் துரோகிகளுக்கும் நன்மைசெய்கிறவராயிருந்தார். "எனக்குச் செவிகொடுக்கிற உங்களுக்கு நான் சொல்லுகிறேன்: உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மைசெய்யுங்கள்" (லூக்கா 6:27) என்ற வசனத்தின்படி, நாம் சத்துருக்களை சிநேகிக்க வேண்டும். நம்மை பகைக்கிறவர்களுக்கு நன்மைசெய்கிறவர்களாயிருக்க வேண்டும். "மனுஷர் உங்களுக்கு எப்படிச் செய்யவேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அப்படியே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். உங்களைச் சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகித்தால், உங்களுக்குப் பலன் என்ன? பாவிகளும் தங்களைச் சிநேகிக்கிறவர்களைச் சிநேகிக்கிறார்களே" (லூக்கா 6:31,32) என்ற வசனங்களின்படி, நமக்கு நன்மை செய்கிறவர்களுக்கே நன்மை செய்தால் பிரயோஜனம் என்ன? மாறாக நம்மைப் பகைப்போர் வெறுப்போர் யாவருக்கும் நாம் நன்மை செய்கிறவர்களாயிருக்க வேண்டும். நம் வீட்டின் அருகில் உள்ளோர், நம்மைக் காண்போர் நம்மைக் குறித்து நற்சாட்சி சொல்ல வேண்டும். இயேசுவைக் கொலை செய்ய வேண்டுமென்று தேடினவர்கள் மட்டுமே பொய்சாட்சி சொன்னார்கள். ஆனால் மற்றபடி அவரைக் குறித்து எல்லாரும் நற்சாட்சி கொடுத்தார்கள்.

2. நாம் பேசுகிற பேச்சின் மூலம்

"எல்லாரும் அவருக்கு நற்சாட்சி கொடுத்து, அவருடைய வாயிலிருந்து புறப்பட்ட கிருபையுள்ள வார்த்தைகளைக்குறித்து ஆச்சரியப்பட்டு: இவன் யோசேப்பின் குமாரன் அல்லவா என்றார்கள்" (லூக்கா 4:22) என்ற வசனத்தின்படி, இயேசுகிறிஸ்துவைக் குறித்து நற்சாட்சி கொடுத்தவர்கள் அவர் வாயிலிருந்து புறப்பட்ட கிருபையுள்ள வார்த்தைகளைக் குறித்தும் நற்சாட்சி கொடுத்தார்கள். உங்கள் வாயிலிருந்து வருகிற வார்த்தை பரிசுத்தமாகவும் மற்றவர்களுக்கு ஆறுதல் கொடுக்கிறதாகவும் இருந்தால் நம்முடைய வார்த்தையைக் குறித்து மற்றவர்கள் சாட்சிகொடுப்பார்கள். "நல்ல மனுஷன் தன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லதை எடுத்துக் காட்டுகிறான்; பொல்லாத மனுஷன் தன் இருதயமாகிய பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாததை எடுத்துக்காட்டுகிறான்; இருதயத்தின் நிறைவினால் அவனவன் வாய் பேசும்" (லூக்கா 6:45) என்ற வசனத்தின்படி, இருதயத்தின் நிறைவினால் மாத்திரமே வாய் பேசும் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். ஆகவே நம்முடையப் பேச்சை வைத்தே நாம் யார் என்பதை மற்றவர்களால் சாட்சி பெற்றுக்கொள்ள முடியும். "சற்று நேரத்திற்குப்பின்பு அங்கே நின்றவர்கள் பேதுருவினிடத்தில் வந்து: மெய்யாகவே நீயும் அவர்களில் ஒருவன்; உன் பேச்சு உன்னை வெளிப்படுத்துகிறது என்றார்கள்" (மத். 26:73) என்ற வசனத்தின்படி, பேதுரு இயேசுவை அறியவில்லை என்று மறுதலித்த போதிலும் அவனுடைய பேச்சின் மூலமாக அவன் இயேசுவோடு இருந்தவன் என்பதை அறிந்துகொண்டார்கள். அப்படியே நம்முடைய பரிசுத்தமான பேச்சின் மூலமாகவும் அன்பான வார்த்தைகளின்மூலமாகவும் சாட்சி விளங்கப் பண்ணலாம்.

3. விசுவாசத்தின் மூலம்

“விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது. அதினாலே முன்னோர்கள் நற்சாட்சிபெற்றார்கள்” (எபி. 11:1,2) என்ற வசனங்களின்படி, விசுவாசத்தினாலே நமது முன்னோர்கள் சாட்சி பெற்றார்கள். அப்படியானால் இயேசு கூறுகிற வசனத்தை விசுவாசித்து செயல்படுவதின் மூலமாக நற்சாட்சி பெறலாம். “உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்” (யோவான் 17:17) என்ற வசனத்தின்படி, தேவன் சொன்ன வசனத்தின்படி வாழும்போது அந்த வசனம் நம்மைப் பரிசுத்தமாக்கும். அப்பொழுது நம்முடைய வாழ்க்கையைக்குறித்து நற்சாட்சி பெறலாம். “கொர்நேலியு தன்னுடனே பேசின தேவதூதன் போனபின்பு, தன் வீட்டு மனுஷரில் இரண்டுபேரையும் தன்னிடத்தில் சேவிக்கிற போர்ச்சேவகரில் தேவபக்தியுள்ள ஒருவனையும் அழைத்து” (அப். 10:7) என்ற வசனத்தின்படி, கொர்நெலியு பேதுருவை அழைக்கும்படிக்கு தன் வீட்டாரில் இரண்டு மனுஷரையும் தன் போர்ச்சேவகரில் பக்தியுள்ள ஒருவனையும் அனுப்பினான். அப்படிப்பட்டவர்கள் பேதுருவைப் பார்க்கும்படி வந்தார்கள். “அப்பொழுது பேதுரு கொர்நேலியுவினால் தன்னிடத்தில் அனுப்பப்பட்ட மனுஷரிடத்திற்கு இறங்கிப்போய்: இதோ, நீங்கள் தேடுகிறவன் நான்தான், நீங்கள் வந்திருக்கிற காரியம் என்ன என்றான். அதற்கு அவர்கள்: நீதிமானும், தேவனுக்குப் பயப்படுகிறவரும், யூதஜனங்களெல்லாராலும் நல்லவரென்று சாட்சி பெற்றவருமாகிய கொர்நேலியு என்னும் நூற்றுக்கு அதிபதி உம்மைத் தம்முடைய வீட்டுக்கு அழைப்பித்து, உம்மால் சொல்லப்படும் வார்த்தைகளைக் கேட்கும்படி பரிசுத்த தூதனாலே தேவயத்தனமாய்க் கட்டளைபெற்றார் என்றார்கள்” (அப். 10:21,22) என்ற வசனங்களின்படி, கொர்நேலியுவினால் அனுப்பப்பட்ட மூன்றுபேரும் ஒரேவிதமாக சாட்சி கூறினார்கள். அவன் நீதிமான் என்றும், தேவனுக்குப் பயப்படுகிறவர் என்றும், யூதஜனங்களெல்லாராலும் நல்லவரென்று சாட்சி பெற்றவர் என்றும் மூவரும் அவனைக்குறித்து சாட்சி கூறினார்கள். சவுல் தேவனால் தொடப்பட்டபொழுது அவனுடைய கண்கள் குருடாயிற்று. அவனிடத்தில் இயேசு அனனியா என்னும் சீஷனை அனுப்பினார். அனனியா போய் அவனுக்காக ஜெபம் பண்ணினான். அப்பொழுது சவுல் பார்வையடைந்து ஞானஸ்நானம் பெற்று தேவனுக்காக செயல்பட்டான். “அப்பொழுது வேதப்பிரமாணத்தின்படியே பக்தியுள்ளவனும், அங்கே குடியிருக்கிற சகல யூதராலும் நல்லவனென்று சாட்சிபெற்றவனுமாகிய அனனியா என்னும் ஒருவன்” (அப். 22:12) என்ற வசனத்தின்படி, பவுல் அனனியா என்னும் சீஷனைக்குறித்து வேதப்பிரமாணத்தின்படி பக்தியுள்ளவனும், அங்கே குடியிருக்கிற சகல யூதராலும் நல்லவனென்று சாட்சிபெற்றவன் என்றும் கூறினான். அருமையானவர்களே நாமும் நம்மைச் சூழ்ந்தவர்களாலே நல்லவனென்ற சாட்சி பெற்றுக்கொள்ள வேண்டும்.



ஒருவேளை இயேசுவைப் பிடிக்காதவர்கள் அவருக்கு விரோதமாய் பொய்சாட்சி சொன்னதுண்டு. அதேபோல உன்னைப் பிடிக்காதவர்கள் உன்னைக்குறித்து பொய் சாட்சி சொல்லலாம். ஆனால் இயேசுவைப்போல எல்லாராலும் நற்சாட்சி பெற்றவர்களாயிருக்க வேண்டும். “தேமேத்திரியு எல்லாராலும் நற்சாட்சிபெற்றதுமல்லாமல், சத்தியத்தாலும் நற்சாட்சிபெற்றவன்; நாங்களும் சாட்சிகொடுக்கிறோம், எங்கள் சாட்சி மெய்யென்று அறிவீர்கள்” (3 யோவான் 1:12) என்ற வசனத்தின்படி, தேமேத்திரியு என்று சொல்லக்கூடிய தேவனுடைய மனுஷன் எல்லாராலும் நற்சாட்சி பெற்றவனாயிருந்தான். சத்தியத்தாலும் நற்சாட்சி பெற்றவனாயிருந்தான். சத்தியத்தினால் நற்சாட்சி பெற்றுக்கொள்வது எப்படி? வேதம் என்ன சொல்லுகிறதோ அப்படியே வேதத்தின்படி வாழ்ந்தால் சத்தியம் நம்மைக் குறித்து சாட்சி சொல்லும். அதோடுமாத்திரமல்ல ஊழியர்களாலும் சாட்சி பெற்றவனாயிருந்தான். அருமையானவர்களே இயேசு எல்லாராலும் நற்சாட்சி பெற்றவர். அப்படியே நாமும் நற்கிரியைகள் மூலமாகவும், நம்முடைய பேச்சின் மூலமாகவும், வசனத்தை விசுவாசித்து செயல்படுகிறதின் மூலமாகவும், எல்லாராலும் நற்சாட்சி பெற்றவர்களாய் வாழுவோம். அதினிமித்தம் கர்த்தரை மகிமைப்படுத்துவோம். கர்த்தர் வருகிறார். மாரநாதா!!

RNI Regn. No: TNTAM/2015/66452
**Printed and Published by: Sri. P. Arputharaj Samuel**, On Behalf Of: Zion Trust, From 27/37, James Street, Poonamallee, Tiruvallur District, Chennai – 600056
Printed at New Shenbagam Offset, 2/67, NGO Colony, Sivakasi West – 626124
Editor : Pastor P. Arputharaj Samuel : Mobile No. 9677050234

# இளகிய உள்ளம்

ஆராய்ச்சி மையம் ஒன்றில் வேலை செய்துகொண்டிருந்த விஞ்ஞானி ஒருவர் தனது தலைமை அதிகாரியிடம் சென்று, தன் பிள்ளைகளை 5 மணிக்குப் பொருட்காட்சி சாலைக்கு அழைத்துச் செல்ல அனுமதி கேட்டார். அனுமதியும் கிடைத்தது. தனது வேலையில் மூழ்கிப்போன விஞ்ஞானி மணியைப் பார்த்தபோது எட்டு ஆகியிருந்தது. தன் பிள்ளைகள் கோபமாக இருப்பார்களே எனக் கவலைப்பட்டார். வீட்டிற்கு வந்தபோது மனைவி மட்டும் வீட்டில் இருந்தார். பிள்ளைகள் எங்கே என்று கேட்டார். “பிள்ளைகள் ஐந்து மணிக்கே ரெடியாயிருந்தார்கள். உங்கள் அதிகாரி வந்து அவர்களைப் பொருட்காட்சி சாலைக்கு அழைத்துச் சென்றார்” என்றாள். தனது ஊழியர் கடினமாக உழைப்பதைக் கண்ட அதிகாரி பிள்ளைகள் ஏமாறுவதை விரும்பவில்லை. இந்த அதிகாரி யார் தெரியுமா? நமது முன்னாள் குடியரசுத் தலைவர் A.P.J. அப்துல் கலாம்! இளகிய உள்ளமுள்ளவராயிருங்கள். அன்புள்ளவர்களாயிருங்கள்!!



# அடிப்பக்கம்




சுற்றுலாப் பயணி ஒருவர் கம்பளம் நெய்யும் தொழிற்சாலையைச் சுற்றிப் பார்த்துக்கொண்டிருந்தார். வேகமாக நெய்து கொண்டிருப்பவர்களை மாடியிலிருந்து பார்த்தார். அவர்கள் நூலிழைகளை முடிபோட்டுக் கொண்டிருந்தனர். நிறமற்ற கம்பளத்தில் நூல்களும் முடிச்சுகளும் துருத்திக் கொண்டிருந்தன. தனது வழிகாட்டியிடம், “இந்தக் கம்பளம் நன்றாக இல்லையே. பளிச்சென்ற வர்ணங்கள் இருந்தால் அழகாக இருக்கும்” என்றார். நெய்பவரிடம் வழிகாட்டி கம்பளத்தைத் திருப்பி மறுபக்கத்தைக் காட்டச் சொன்னார். ஆஹா, என்ன அழகு! சுற்றுலாப் பயணி அசந்துவிட்டார். கம்பளம் முழுவதும் வண்ண வண்ண ரோஜாக்களாக இருந்தன. நமது வாழ்க்கையின் அடிப்பக்கத்தைப் பார்ப்போமானால் சோர்ந்து போவோம். தேவன் இப்போதுதான் நூலிழைகளில் முடிச்சு போட்டுக்கொண்டிருக்கிறார் என்று அறியோம். அவரது வேலை முடியும்போது அவரது கைவண்ணப்படியே அழகாய் ஜொலிப்போம்.

# இலவசப் பணம்

தன்னிடம் ஏராளமாகப் பணம் இருப்பதாகவும் அதை எல்லோருக்கும் பகிர்ந்தளிக்க விரும்புவதாகவும் ஒருவர் விளம்பரப்படுத்தினார். இடம் மெரினா கடற்கரை என்று அறிவிக்கப்பட்டு தேதியும் குறிப்பிடப்பட்டது. அந்த நாளில் எல்லோரையும் வரிசையில் நிற்கச் சொன்னார். அங்கு ஒரே தள்ளு முள்ளு. பண மூட்டைகளுடன் லாரிகள் வந்து சேர்ந்தன. “கவனமாய்க் கேளுங்கள். முதலாமவர் ரூ.1/- பெறுவார். அடுத்தவர் 2, அடுத்தவர் 3 இப்படியாகக் கொடுக்கப்படும்” என்றார். அதைக் கேட்டவுடன் முதலாமவன் விலகிக்கொண்டு இரண்டாமவனுக்கு இடமளித்தான். அவனும் நகர்ந்தான். இப்படியாக க்யூ கரைந்துபோனது. சிலர் பஸ் ஏறி செங்கல்பட்டுப் போகலாமா எனப் பேசிக்கொண்டனர். கடைசியில் யாருக்கும் எதுவும் கிடைக்கவில்லை. இலவசப் பணம் சிறகடித்துப் பறந்துபோகும். உழைத்துச் சம்பாதிக்க வேண்டும். பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது. பண ஆசையில்லாதவர்களாயிருங்கள்.



PATHAIKKU VELICHHAM - MONTHLY
Posted at Egmore RMS, Patrika Channel, Chennai - 08.

Registered with the Registrar of
News Paper of India under Regn. No. TNTAM/2015/66452
Postal Registration No. TN/TBM/193/2024-2026
TN/PMG(CCR)/WPP 647/2024-2026
Published on 25th of every month
Posting on 11th - 15th of November 2025
Licensed to post without prepayment

## மத்தேயு 28 : 11 - 20

11. அவர்கள் போகையில், காவல் சேவகரில் சிலர் நகரத்திற்குள்ளே வந்து, நடந்த யாவற்றையும் பிரதான ஆசாரியருக்கு அறிவித்தார்கள்.

12. இவர்கள் மூப்பரோடே கூடிவந்து, ஆலோசனைபண்ணி, சேவகருக்கு வேண்டிய பணத்தைக் கொடுத்து:

13. நாங்கள் நித்திரைபண்ணுகையில், அவனுடைய சீஷர்கள் இராத்திரியிலே வந்து, அவனைக் களவாய்க் கொண்டுபோய்விட்டார்கள் என்று சொல்லுங்கள்.

14. இது தேசாதிபதிக்குக் கேள்வியானால், நாங்கள் அவரைச் சம்மதப்படுத்தி, உங்களைத் தப்புவிப்போம் என்றார்கள்.

15. அவர்கள் பணத்தை வாங்கிக்கொண்டு, தங்களுக்குப் போதிக்கப்பட்டபடியே செய்தார்கள். இந்தப் பேச்சு யூதருக்குள்ளே இந்நாள்வரைக்கும் பிரசித்தமாயிருக்கிறது.

16. பதினொரு சீஷர்களும், கலிலேயாவிலே இயேசு தங்களுக்குக் குறித்திருந்த மலைக்குப் போனார்கள்.

17. அங்கே அவர்கள் அவரைக் கண்டு, பணிந்துகொண்டார்கள்; சிலரோ சந்தேகப்பட்டார்கள்.

18. அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

19. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து,

20. நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்; இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்.

சீயோன் சபை வழங்கும் "பரிசுத்தத்தின் நேரம்" சால்வேஷன் T.V. யில் ஒவ்வொரு ஞாயிறும் மதியம் 02:30 மணிக்கு காணத்தவறாதீர்கள்

சீயோன் சபை வழங்கும் 'பரிசுத்தத்தின் நேரம்' Heaven TV TCCL Cable மூலமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் 717, 816 Channel களிலும், மற்ற மாவட்டங்களில் 729, 715 Channel களிலும் ஒவ்வொரு ஞாயிறும் இரவு 9:30 மணிக்கு ஒளிபரப்பப்படுகிறது. மேலும் இணையதளத்தில் 'Heaven TV India' என்ற Mobile App மூலமும் காணலாம்.

சீயோன் சபை வழங்கும் 'பரிசுத்தத்தின் நேரம்' நம்பிக்கை டிவியில் ஒவ்வொரு சனிக்கிழமையும் மாலை 6 மணிக்கு காணத்தவறாதீர்கள்

நம் வாசகர்கள் மேலும் சத்தியத்தினைச் சத்தியமாய் அறிந்துகொள்ள வீடியோ மற்றும் ஆடியோ செய்திகள் நம்முடைய இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

### Social Links

- zion-church-poonamallee
- www.zionchurch.co.in
- zion.church.poonamallee
- ZionChurchPoonamallee
- ZionChurchPoonamallee
- zionchurchpoonamallee@gmail.com

STAY BLESSED

குறிப்பு: தூய வேதாகமம் மாற்கு 16:15,16 ன் அடிப்படையிலும், இந்திய அரசு சட்டம் ஷரத் 25 ன் கீழ் அளிக்கப்பட்டுள்ள மத சுதந்திரத்தின் அடிப்படையிலும் இப்பத்திரிக்கை பிரசுரிக்கப்பட்டு விநியோகிக்கப்படுகிறது. யாரையும் கட்டாயப்படுத்தியோ, பயமுறுத்தியோ, நயங்காட்டியோ, மோசடியான முறையிலோ மதம் மாற்றுவது இப்பத்திரிக்கையின் நோக்கமல்ல.

Name

PIN

*If undelivered, please return to*

P. Arputharaj Samuel
Pastor - Zion Church
27/37, James Street,
Poonamallee,
Chennai - 600056
044 - 26274745, 9677050234
chennaizion@gmail.com
www.zionchurch.co.in